'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 246 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(02.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 12, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## முச்சக்கர வண்டி கட்டணத்தில் புதிய திருத்த



02பக்கம்



## பெற்றோல் விலை குறைப்பு

•கே. சுபானி

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 15 ரூபாவாலும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 50ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதுடன் நேற்றுமுன்தினம் (31) முதல் இவ்விலை குறைப்பு அமுலுக்கு வந்துள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## ஆறு பொருட்களின் விலைகள் குறைப்பு

LANKA Sathosa ලංකා සතොස லங்கா சதொச

•கே. சுபானி

லங்கா சதொச நிறுவனம் ஆறு அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகளை குறைத்துள்ளது.

குறித்த ஆறு அத்தியாவசியப் பொருட்களின் புதிய விலைகள் நேற்று (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, கோதுமை மா ஒரு கிலோகிராம் 15 ரூபாவாலும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் 14 ரூபாவாலும் பருப்பு ஒரு கிலோகிராம் 11 ரூபாவாலும் வெள்ளை சீனி ஒரு கிலோகிராம் 10 ரூபாவாலும் கடலை ஒரு கிலோகிராம் 5 ரூபாவாலும் வெள்ளை நாட்டரிசி (உள்ளூர்) ஒரு கிலோகிராம் 4 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

02 பக்கம்

# மோசடியை ஒழிக்க விசேட செயலணி!



### நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய நிலைமாற்றத்துக்கான திட்டத்தை முன்வைத்து ஜனாதிபதி விசேட உரை

இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்று வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2048ஆம் ஆண்டு அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதே தமது போராட்டமாகும் என்றும் தெரிவித்தார்.

"தேசிய நிலைமாற்றத்துக்கான திட்ட வரைபடத்தை" நாட்டுக்கு முன்வைத்து நேற்று விசேட உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கடந்த 09 மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இதன்போது விரிவாக விளக்கினார்.

அத்துடன், எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கான செயல்பாட்டு முன்மொழிவுகளையும் ஜனாதிபதி நாட்டுக்கு முன்வைத்தார்.

அரச நிதி மறுசீரமைப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆகிய பிரதான 04 தூண்களில் நாட்டின் எதிர்காலம் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக நிலைமாற்றும் செயற்பாட்டுக்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிலையான முயற்சிகளை அமுல்படுத்த தனியார்த் துறையிடமிருந்து முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் கூட்டாய்வு முறையொன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02 பக்கம்

## பத்து அமைச்சுகளில் புதிய திருத்தங்கள்



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

பகுதி I : தொகுதி (I) - பொது

### மே 30 முதல் அமுலுக்கு

•நா.தினுஷா

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு உள்ளிட்ட முக்கியமான பத்து அமைச்சுகளில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

### ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம்

## ஆராய எதிர்க்கட்சியால் விசேட குழுக்கள்



ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் உள்ளிட்ட அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலங்களை ஆராய எதிர்க்கட்சியினால் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலத்தை ஆராய பேராசிரியர் சரித்த ஹேரத் தலைமையில் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அதன் ஏனைய உறுப்பினர்களாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், கயந்த கருணாதிலக்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

02 பக்கம்

## பிரதான தொழிற்றுறையினர் பதிவு செய்வது கட்டாயம்



PART I : SECTION (I) -- GENERAL

Government Notifications

### விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி ஜனாதிபதியால் வெளியீடு

•நா.தினுஷா

வைத்தியம், பொறியியல், சட்டம், கணக்காய்வு, வங்கி, கட்டட வடிவமைப்பு உள்ளிட்ட தொழிற்றுறையை சார்ந்தவர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கட்டாயம் பதிவுசெய்யப்பட வேண்டும் என்று அறிவித்து நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் (31) வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## நாடெங்கும் எரிபொருளுக்கு நேற்று பாரிய தட்டுப்பாடு

### நிலைமை சீராகுமென அமைச்சர் காஞ்சன நம்பிக்கை





•நா.தினுஷா

கொழும்பு உள்ளிட்ட நாடெங்கிலுமுள்ள அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்ததையும் பல்வேறு பிரதேசங்களில் கடும் வாகன நெரிசலையும் நேற்று (01) அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மாதாந்த எரிபொருள் விலை மாற்றத்தை தொடர்ந்து,...

02 பக்கம்



## ஊடகங்களை நசுக்கும் ஜனநாயக சூறையாடல்

### அச்சமின்றி அறிக்கையிடக் கோருகிறார் சஜித்

ஜனநாயக விரோத செயற்பாடுகளை அமுல்படுத்தி ஜனநாயகத்தை அழிக்கும் செயற்றிட்டத்தின் மற்றுமொரு திட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளதாகவும் இதன் பிரகாரம், ஒளிபரப்பு அதிகார சபை சட்டத்தின்மூலம் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை ஸ்தாபித்து நாட்டின் ஊடகங்களை நசுக்கி ஜனநாயகத்தை சூறையாடும் வகையில் புதிய சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வரவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ் சுமத்தியுள்ளார்.

02 பக்கம்

## அவதானமாக செயற்பட வேண்டியது ஊடகங்களே!

### மஹிந்த எம்.பி. அறிவுரை



•நா.தினுஷா

நாட்டில் எதிர்காலத்தில் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் நிலை ஏற்படுமென்றால், அவ்வாறானவொரு நிலை ஏற்படாத வகையில் ஊடக நிறுவனங்களே அவதானமாக செயற்பட வேண்டும் என்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரம், ஜய ஸ்ரீ மகாபோதி மற்றும் ருவன்வெலிசாய ஆகிய இடங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,...

02 பக்கம்

## செப்டெம்பருக்குள் மீள செலுத்துவோம்

### பங்களாதேஷ் கடன் குறித்து மத்திய வங்கி ஆளுநர் தகவல்

•த. யுவராஜ்

பங்களாதேஷிடம் இருந்து பெற்றுக்கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்டெம்பர் மாதத்துக்குள் செலுத்த முடியுமென மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். மத்திய வங்கியில் நேற்று (01) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ஸ்ரீ லங்காவை சிங்கப்பூர் ஆக்காமல் விடமாட்டேன் என்கிறார் ஜனாதிபதி ஐயா.. ஆனா ஸ்ரீ லங்காவை ஸ்ரீ லங்கா போலாவது வைக்க விடமாட்டம் என்றபடி நடக்கிறாங்கள் அவரோட இருக்கிற ஆக்கள்..!

## அரசைக் கவிழ்க்கும் சதியில் உடந்தையா?

### விமல் எம்.பிக்கு எதிராக ஷவேந்திர சில்வா நிபந்தனைக் கடிதம் அனுப்பிவைப்பு

•நமது நிருபர்

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதித்திட்டத்தில் ஈடுபட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்த கருத்துக்கு எதிராக பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் சட்டத்தரணிகள் ஊடாக நிபந்தனைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

விமல் வீரவங்ச எழுதிய 'ஒன்பது – மறைக்கப்பட்ட கதை' என்ற தலைப்பிலான நூல் வெளியீடு கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது ஷவேந்திர சில்வாவுக்கு எதிராக...

02 பக்கம்

## கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை தீர்ப்பு

### 10 வருடங்களின் பின்னர் வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கியது



•சி. திவியா

வவுனியாவில் கடந்த 2013ஆம் ஆண்டு முச்சக்கர வண்டி சாரதியான சதாசிவம் குகானந்தன் என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் பிறிதொரு முச்சக்கர வண்டி சாரதியான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு...

02 பக்கம்

### உஷ்



ஜனாதிபதி ரணிலுடன் அரசியல் தொடர்புகளை வைத்திருக்க வேண்டாமெனவும் ஜனாதிபதியை சந்திப்பதாயின் கட்சி மேலிடத்துக்கு அறிவித்துவிட்டே செல்லவேண்டுமெனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அக்கட்சியின் மேலிடத்திலிருந்து ஓடர் பறந்துள்ளதாம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களை உள்வாங்க ஜனாதிபதி தரப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக செய்திகள் வெளியானதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

இப்போதைக்கும் காஞ்சன விஜேசேகர, ஷெஹான் சேமசிங்க, கனக ஹேரத் உட்பட்ட இளம் எம்.பிக்கள் ரணிலை அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டுள்ளார்களாம்.

# சீமெந்தின் விலை குறைவடையும்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

சீமெந்து மூடையொன்றின் விலை எதிர்வரும் இரு தினங்களில் 300 – 500 ரூபாவால் குறைவடையும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுமானத் துறையிலுள்ளவர்களுடன் நேற்று முன்தினம் (31) கலந்துரையாடலொன்றை முன்னெடுத்திருந்தோம். அதன்போது அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தியிருந்தோம். அதன்போது, அவர்களுக்கான மூலப்பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்கள்.

அதனால், சீமெந்து உற்பத்தி நிறுவனங்களுடன் கலந்துரையாடியிருந்தோம். அவர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கிறது அதனையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். தேசிய கைத்தொழிலை பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

கட்டுமானத்துறை சந்தித்துள்ள நெருக்கடி நிலைமையை கவனத்தில்கொண்டு, எதிர்வரும் சில தினங்களில் சீமெந்து விலைகளை மிக விரைவில் குறைக்குமாறு அந்த தரப்பினரிடம் கோரியிருந்தோம். அதேபோன்று, நுகர்வோர் அதிகாரசபையுடன் இணைந்து விலைக்குறைப்புக்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தோம்.

எதிர்வரும் இரு தினங்களில் சீமெந்து விலை குறிப்பிட்ட தொகையில் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கிறோம். சீமெந்து மூடையொன்றின் விலையை கட்டாயம் 300 – 500 ரூபாவுக்கு இடையில் குறைக்குமாறு அறிவித்துள்ளோம். சீமெந்து உற்பத்தியாளர்களுக்கு இருக்கும் பிரச்சினைகளுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். குறைந்தது 300 ரூபாவாவது சீமெந்து விலையில் வீழ்ச்சி ஏற்படும்.

இரும்பு உற்பத்தி நிறுவனங்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அவர்களின் உற்பத்திப் பொருட்களின் விலையையும் குறைக்குமாறு கோரியுள்ளோம். மேலும், இன்று டயில், அலுமினியம், வயர் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் அல்லது இறக்குமதி செய்யும் நிறுவனங்களிடமும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

### செப்டெம்பருக்குள்...

"ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதத்தில் குறித்த கடனை செலுத்திவிடுவோம் என பங்களாதேஷூடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்" எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு 2021ஆம் ஆண்டு மே மாதத்தில் பங்களாதேஷிடம் இருந்து 200 மில்லியன் டொலரை கடனாகப் பெற்றுக்கொண்டோம்.

அந்த வகையில், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் நாடு கடனைத் திருப்பிச் செலுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் அதைச் செய்யத் தவறிவிட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஏப்ரலில், இலங்கை தனது 51 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை கடனை மார்ச் மாதத்துக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஆனால் நாடு இன்னும் அந்நிய செலாவணி இருப்புகளின் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. இதனால் பங்களாதேஷ் வங்கியிடம் கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிக்கக்கோர வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இந்நிலையில், பங்களாதேஷ் வங்கி தனது அந்நிய செலாவணி கையிருப்பு வேகமாக குறைந்து வரும் நேரத்தில் காலக்கெடுவை நீடித்தது. புதிய காலக்கெடுவின்படி, இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்துக்குள் இலங்கை கடனை திருப்பிச் செலுத்தும் என்றார்.

### பெற்றோல் விலை...

இதுகுறித்து இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய விலையின்படி, ஒரு லீற்றர் லங்கா ஒக்டேன் 92 ரக பெற்றோல் 318 ரூபாவாகவும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 245 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

மேலும், ஒரு லீற்றர் தொழிற்சாலை மண்ணெண்ணெய் 60 ரூபாவால் குறைக்கப்பட்டு 270 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

ஒரு லீற்றர் ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 385 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசல் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 340 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### அவதானமாக செயற்பட...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பை போன்று, அதிக வாக்குகளை பெற்றுக்கொண்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவி கிடைத்தால் சிறந்ததாக இருக்கும். மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த பதவியை ஏற்பதற்கு எங்களின் ஒத்துழைப்பை மாத்திரமே வழங்கினோம்.

ஏதாவதொரு பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் தொலைக்காட்சிகளின் உரிமங்களை கேள்விக்குட்படுத்தும் வகையில் புதிய சட்டமூலம் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாத வகையில் தொலைக்காட்சி நிறுவனங்களே பாதுகாப்பாக இருக்கவேண்டும். பொருளாதார நிலைமைப் பற்றிக் கூறுவதானால் படிப்படியாக நிலைமை சீர்செய்துகொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறோம். ஆதரவாளர்கள் இன்னும் எங்களுடன் கைகோர்த்து ஒன்றாகவே இருக்கிறார்கள். அவர்களின் ஆதரவுடன் முன்னோக்கிச் செல்லுவோம் என்றார்.

### ஆறு பொருட்களின்...

அதன்படி, ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் புதிய 210 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் பெரியவெங்காயத்தின் விலை 115 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் சிவப்பு பருப்பின் விலை 314 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 229 ரூபாவாகவும் கடலை ஒரு கிலோகிராம் 545 ரூபாவாகவும் வெள்ளை நாட்டரிசி (உள்ளூர்) 175 ரூபாவாகவும் விற்கப்படும் என சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

### பத்து அமைச்சுகளில்...

அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ், கொழும்பு தாமரைக் கோபுரத்தை வணிக மாதிரியொன்றாக மாற்றி சுற்றுலா மத்திய நிலையமாக மேம்படுத்தல், பொறியியல் உசாத்துணை சேவைகள் மற்றும் நிர்மாணப் பணிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், ஸ்ரீலங்கா ரெலிகொம் கம்பனி மற்றும் அதன் நிர்வாகக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள், கலம்பு லோட்டஸ் ரவர் மெனேஜ்மென்ட் கம்பனி பிரைவேட் லிமிட்டெட், நோர்த் சி லிமிட்டட், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா திரிபோச கம்பனி, கல்ஓயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி, தேசிய சோல்ட் கம்பனி, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கம்பனி, வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. கம்பனி, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி - சினிமா பூங்கா, வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி ஆகிய நிறுவனங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தொழில்நுட்ப அமைச்சு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, சுகாதார அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு என்பவற்றிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிரதான தொழிற்றுறையினர்...

இந்த நடைமுறை ஜூன் முதலாம் திகதி (நேற்று) முதல் அமுல்படுத்தப்படுவதாக அந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவ சபையில் பதிவாகியுள்ள வைத்தியர்கள், இலங்கை பட்டையக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர்கள், இலங்கை சான்றிதழ் முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தில் பதிவான உறுப்பினர்கள், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தில் பதிவான உறுப்பினர்கள், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், இலங்கை கட்டட கலைஞர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், இலங்கை தர நிர்ணயவியலாளர் நிறுவனத்தின் உறுப்பினர்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், பிரதேச செயலாளரின் கீழ் பதிவான வர்த்தகர்கள், மோட்டார் வாகன திணைக்களத்தில் வாகனங்களை பதிவு செய்துள்ள நபர்கள் (முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் ட்ரெக்டர் தவிர்ந்த), இலங்கையில் அசையாத சொத்துகளை கொள்வனவு செய்துள்ள அல்லது கைப்பற்றியுள்ள காணி உரிமங்களை கைமாற்றிக்கொண்டுள்ள நபர்கள், மாதாந்தம் இரு தரப்பு ஊழியர்களிடமிருந்தும் 20,000 ரூபாவுக்கும் மேல் பங்களிப்பு தொகையைக் கொண்ட பணியாளர்கள், தேசிய அதிகார சபையின் ஊடாக கட்டடத் திட்ட அனுமதி கிடைத்தநபர், இலங்கையில் மாதாந்தம் 100,000 ரூபா அல்லது வருடாந்தம் 1,200,000 ரூபா நிதிக் கிடைக்கும் நபர்கள் இதில் உள்ளடக்கப்படுவார்கள் என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் 18 வயது பூர்த்தியாகும் அல்லது 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் 18 வயதையடையும் நபர்களுக்கும் இந்த புதிய ஏற்பாடுகள் பொருத்தமானதாக இருக்குமென்று வர்த்தமானியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஒளிபரப்பு அதிகாரசபை...

இந்த சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளை இந்த குழு சேகரிக்க ஆரம்பித்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்ததன் பின்னர், ஒளிபரப்பு அதிகார சபை சட்ட மூலம் தொடர்பான எதிர்க்கட்சி கூட்டணியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமூலம் குறித்து ஆராய்வதற்காக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி சட்டமூலத்தை ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எரான் விக்ரமரத்ன தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### மோசடியை ஒழிக்க...

நவீன உலகுக்கும் நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்காவிட்டால் நாடு பின்னோக்கிச் செல்லும் என்றும் அதன் முடிவாக நாடு, பொருளாதார காலனித்துவமாக மாறிவிடும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எனவே நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்ததோடு, அதற்கு அவசியமான துரித பொருளாதார மறுசீரமைப்புகளை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒழுங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்த 05 ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவதோடு, அடுத்த 25 ஆண்டுகளில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறையினிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அதற்காக இளைஞர்களை தயார்படுத்துவதாகவும் தெரிவித்தார். அந்தப் பணியை மேற்கொள்ளும் திறன் எமது இளைஞர்களிடம் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம், இலகுவான பணி இல்லையென்றாலும் நாட்டுக்கு சிறந்த விடயங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாம் எடுக்கும் தீர்மானங்கள் எவ்வளவு கடினமான மற்றும் வேதனையானதாக இருந்தாலும், எதிர்கால சந்ததியினருக்காக அந்தக் கடினமான பாதையில் சரியான கொள்கைகளின்படி முன்னேறுவதன்மூலம் மாத்திரமே நாட்டை மீண்டும் உயர்வடையச் செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஒரு இலக்குடன் சரியான பாதையில் செல்வதன் விளைவுகளை இன்று நாம் அனைவரும் அனுபவிப்பதாகவும் 70% வரை உயர்ந்திருந்த பணவீக்கத்தை தற்போது 25.2% வரை குறைக்க முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதனால் வாழ்க்கைச் சுமை படிப்படியாகக் குறைந்து வருவதோடு, ஒட்டுமொத்த சமூகமும் இந்த பயனை உணர ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடினமான பயணத்தின்போது அனைத்து துன்பங்களையும் சகித்துக் கொண்ட நாட்டு மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதன் மூலம் சிரமங்களையும் துன்பங்களையும் குறைத்து நாட்டுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சீர்திருத்தங்கள் ஒட்டுமொத்த மக்களுக்கும் ஒரு சேர பயன் தரும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் நீங்கள் உட்பட முழு நாடும் முன்னேற்றம் அடையும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவோம். அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தியடைந்த நாடாக மாறும். அதுவே எங்களின் நோக்கமாகும். முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்காக நாம் இளைஞர்களை தயார்படுத்தி வருகிறோம். சீரமைக்கிறோம். அதாவது, சவால்களை எதிர்கொண்டு, 2048ஆம் ஆண்டளவில் எமது தாய்நாட்டை முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு இளைஞர்கள் தோள் கொடுப்பார்கள் என்றும் நாட்டுக்கான இந்தப் பொறுப்பையேற்று அந்த இலக்கை அடைவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி.

### அரசைக் கவிழ்க்கும்...

விமல் எம்.பி. கருத்து வெளியிட்டதுடன் அந்த நூலிலும் அது குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையிலேயே ஷவேந்திர சில்வாவின் சட்டத்தரணிகள் விமல் வீரவங்சவுக்கு நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதித் திட்டத்தில் உடந்தையாக இருந்ததாக அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனக்கும் இராணுவத்துக்கும் இதன்மூலம் அவப்பெயர் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

### கொலைக் குற்றவாளிக்கு...

மரண தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று (01) தீர்ப்பளித்தார்.

2013ஆம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி வவுனியா, மருக்காரம்பளை பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி சாரதி ஒருவரின் வீட்டில் புதுமனை புகுவிழா இடம்பெற்றுள்ளது. குறித்த நிகழ்வு முடிந்ததும் இரவு இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது அங்கு கலந்துகொண்டவர்களுக்கிடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது. இதன் பின் அவரவர் தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

மறுநாள் 29ஆம் திகதி காலை 7 மணியளவில் வவுனியா இலங்கை வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் புகையிரத கடவையில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து குறித்த சடலம் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டதுடன், முச்சக்கர வண்டி ஒன்றில் இரத்தக்கறை காணப்படுவதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

இதனையடுத்து முதலாம் சந்தேக நபரான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முச்சக்கரண்டி சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், இரண்டாம் சந்தேக நபரான பிறிதொரு முச்சக்கர வண்டி சாரதி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைகள் நடைபெற்று தடுப்பு காவலில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டு, கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் அரச சட்டவாதியான தர்சிகா திருக்குமரநாதனின் நெறிப்படுத்தலில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தபோது முச்சக்கரவண்டியில் பெறப்பட்ட இரத்த மாதிரியும் கொலை செய்யப்பட்ட நபரின் இரத்த மாதிரியும் ஒன்றுடன்ஒன்று ஒத்துப்போவதை தடயவியல் பொலிஸார் மன்றில் சாட்சியத்தின் மூலம் வெளிப்படுத்தினர்.

அத்துடன், மொட்டை விசை பாவித்ததன் மூலம் வெளிக்காயம் மற்றும் உட்காயம் ஏற்பட்டு குறித்த மரணம் ஏற்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி மன்றில் சாட்சியமளித்தார்.

சந்தர்ப்பம், சூழ்நிலை, சாட்சியம் மூலம் முதலாம் எதிரியான பொதுக்கிணறு வீதி தோணிக்கல்லைச் சேர்ந்த ஜேசுதாசன் இலங்கேஸ்வரன் தான் குறித்த கொலையை நிகழ்த்தியுள்ளார் என்பதை அரச சட்டவாதியால் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால், முதலாம் சந்தேக நபருக்கு மரணதண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்ததுடன், இரண்டாம் எதிரியான சந்தேக நபரை விடுவித்து மேல் நீதிமன்று தீர்ப்பளித்தது.

### நாடெங்கும் எரிபொருளுக்கு...

விநியோக நடவடிக்கைகளில் ஏற்பட்ட காலதாமதமே இந்த எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் பிரதான இடங்களில் நேற்று காலை முதல் வாகன நெரிசலை அவதானிக்க கூடியதாக இருந்தது. கொழும்பை அண்மித்த பிரதேசங்கள் உள்ளிட்ட நாடு முழுவதும் இந்த எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. காலையில் அலுவலகம் செல்வோர், எரிபொருள்சார் தொழில்துறையை சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பொது மக்கள் அசௌகரியத்துக்குள்ளாகியிருந்தார்கள்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. ஆகிய நிறுவனங்களிடம் எரிபொருள் கையிருப்பில் இருப்பதால் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து பொது மக்கள் அச்சமடைய வேண்டியதில்லை என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்திருந்தார்.

எரிபொருள் விலை குறையும் என்ற எதிர்பார்ப்பில் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் எரிபொருள் கொள்வனவுக்கான கோரிக்கைகளை முன்வைக்காததாலேயே இந்த தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், விநியோகத்தர்களிடம் குறைந்தபட்சம் 50 சதவீதம் இருப்பை வைத்திருக்கவேண்டும். அவ்வாறு, குறைந்தபட்ச கையிருப்புகளை பராமரிக்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமத்தை மறுபரிசீலனை செய்து அதனை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு எரிபொருள் கூட்டுத்தாபனத்திடம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில், 122,769 மெட்ரிக் தொன் டீசல், 5,739 மெட்ரிக் தொன் சுப்பர் டீசல், 56,797 மெட்ரிக் தொன், ஒக்டேன் 92 வகையைச் சேர்ந்த பெற்றோல், 2,318 மெட்ரிக் தொன் ஒக்டேன் 98 வகையைச் சேர்ந்த பெற்றோல், 42, 652 மெட்ரிக் தொன் ஜெட் ஏ – 1 வகை எரிபொருள் என்பன எரிபொருள் களஞ்சியம் அல்லது எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் இருப்பில் இருந்ததாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, டொலருக்கு நிகராக எரிபொருள் விலை குறையும் என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் அறிந்துக் கொண்டதால் நேற்று(நேற்று முன்தினம்) எரிபொருள் விநியோகத்துக்கான கோரிக்கை பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்திருந்தது. நேற்று முன்தினம் நள்ளிரவு விநியோகமும் வீழ்ச்சியை சந்தித்திருந்தது. அதனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததுடன் அதன் காரணமாகவே நிரப்பு நிலையங்களில் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### முச்சக்கர வண்டி...

நா. தினுஷா

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்துக்கமைய இம்முறையும் முச்சக்கரவண்டி கட்டணம் குறைவடையாது என்றும் முதல் ஒரு கிலோமீற்றருக்கு 100 ரூபாவும் இரண்டாவது கிலோமீற்றருக்கு 80 ரூபாவும் அறவிடப்படுமென்று தேசிய ஒன்றிணைந்த முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், போக்குவரத்துக்கு முச்சக்கர வண்டிகளை பயன்படுத்தும்போது தொலைபேசிகளிலுள்ள கட்டணமானிகளை பயன்படுத்த வேண்டாம் என்றும் அதனூடாக பெருந்தொகை கட்டணம் அறவிடப்படுவதாகவும் அந்தச் சங்கத்தின் செயலாளர் எல். ரோஹண பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

ஒக்டேன் 92 வகை பெற்றோலின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால், எங்களின் விலை குறைப்பு இதுவல்ல. பெருமளவு தொகையில் எரிபொருள் விலை குறையும் என்ற எதிர்பார்ப்பிலேயே நாங்கள் இருந்தோம். அதன் நிவாரணத்தை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால், எங்களின் எதிர்பார்ப்பை போன்று விலைக் குறைப்பு இடம்பெறவில்லை. முச்சக்கர வண்டி சாதாரணமாக 1 லீற்றர் பெற்றோலில் 20 – 25 கிலோமீற்றர் தூரம் பயணிக்கும். குறிப்பாக கூறுவதானால் 75 சதத்தாலேயே ஒருலீற்றர் பெற்றோலின் விலை குறைவடைந்துள்ளது. எனவே, இதுபோன்றவொரு நிவாரணத்தை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுப்பது என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

அதேபோன்று வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் உதிரிப்பாகங்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. டயர், டியூப் போன்றவை கடந்த காலங்களில் 5,500 ரூபாவிலிருந்தே விற்பனை செய்யப்பட்டன. வாகனங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் சாதாரண விலைக்கு பொருட்களை விற்பனை செய்தாலும் ஒருசில வியாபாரிகள் எங்களிடமிருந்து அநீதியான முறையில் உழைக்கிறார்கள். அதனூடாக நாங்கள் பாரிய நட்டத்தை சந்திக்கிறோம். நட்டத்தின் மத்தியிலேயே இந்த தொழிலையும் முன்னெடுத்து வருகிறோம்.

ஆகவே, தற்போதுள்ள நிலைமையில் முச்சக்கர வண்டிகளுக்காக கட்டணத்தை திருத்துவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனைய சகல முச்சக்கர வண்டி சங்கங்களின் நிலைப்பாடுகளுக்கமைய முதலாவது ஒரு கிலோமீற்றருக்கு 100 ரூபாவும் இரண்டாவது கிலோமீற்றருக்கு 80 ரூபா என்ற அடிப்படையிலேயே முச்சக்கரவண்டி கட்டணம் அறவிடுகிறோம். அதில் மாற்றம் ஏற்படாது.

மேலும், நுகர்வோர் முச்சக்கர வண்டிகளை போக்குவரத்துக்கு பயன்படுத்தும்போது கையடக்க தொலைபேசிகளிலிருக்கும் கட்டணமானிகளை பயன்படுத்த வேண்டாம். அதனூடாக பாரிய கட்டணத்தை அறிவிடுகிறார்கள். இது தொழிலாளர்களினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடல்ல. பகுதிநேரமாக இந்த தொழிலை செய்பவர்களே இவ்வாறு கட்டணம் அறிவிடுகிறார்கள் என்றார்.

### ஊடகங்களை நசுக்கும்...

ஊடகவியலாளர்கள் மக்களுக்கு உண்மையான தகவல்களை அச்சமின்றி அறிக்கையிட வேண்டுமென்றும் எதிர்க்கட்சியாக அவர்களைப் பாதுகாப்போம் என்றும் அவர் உறுதியளித்தார்.

எதிர்க்கட்சியின் சர்வ கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டத்தில் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டம் தொடர்பில் நேற்று (01) கருத்து வெளியிடும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட 6 மாதங்களுக்கு மட்டுமே தொலைக்காட்சி நிறுவன உரிமம் செல்லுபடியாகும் எனவும் அதன் பின்னர், தொலைக்காட்சி அலைவரிசைகள் வருடாந்தம் உரிமம் பெறும் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த உரிமம் வழங்குவதில், சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனம் அரசுக்கு ஆதரவானதா இல்லையா என்பது குறித்து ஆராயப்படும் எனவும் இதன் அடிப்படையில் உரிமக் கட்டுப்பாடுகளை விதித்து ஊடக அடக்குமுறையின் புதிய அத்தியாயத்தை இந்நாட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இதன் பிரதிபலனாக இந்த சட்ட வரைவை அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இதன் மூலம் ஊடகங்கள் மீதான பாரிய அடக்குமுறை முன்னெடுக்கப்பட்டு ஜனநாயகம் மீறப்படும் எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட செய்திகளை மட்டுமே ஒளிபரப்பும் ஊடக அலைவரிசைகளை உருவாக்கும் செயற்பாடுகளே இதன் கீழ் இடம்பெறும் எனவும் நிறைவேற்று அதிகாரம், சட்டமன்றம், நீதித்துறைக்கு அடுத்ததாக நான்காவது அரசாங்கமாக கருதப்படும் சுதந்திர சுயாதீன ஊடகங்கள் இதன் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். தேர்தல் வரைபடத்தை திருத்தியமைத்து நாட்டில் உள்ள 220 இலட்சம் பேரையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தும் சட்ட மூலத்தை கொண்டு வர முயற்சி செய்து நாட்டு மக்களின் ஜனநாயகத்தை அப்பட்டமாக மீறி வரும் வேளையில், ஊடக நிறுவனங்களையும் அடக்குமுறைக்குட்படுத்தத் தயார் என்றாலும், எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து இந்த செயல்முறையை தோற்கடிப்பதாகவும் நீதிமன்றத்தின் உதவியை நாடி எப்படியாவது இந்தச் செயலைத் தோற்கடிப்பதாகவும் அதற்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் எழுப்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்கள் உண்மைத் தன்மை வாய்ந்ததும் துல்லியமானதுமான செய்திகளை அறிக்கையிடுமாறும் உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை எதிர்க்கட்சி ஏற்பதாகவும் எனவே அச்சமின்றி உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்க ஊடக நிறுவனங்கள் முன்வர வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

# ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலத்தை எதிர்த்து நீதிமன்றத்தை நாடுவோம்

## பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவிப்பு

புதிதாக ஒளிபரப்பு அதிகாரசபை சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்து ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் அரசியலமைப்பிலுள்ள தகவல் அறியும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக எமது கட்சி நீதிமன்றத்தை நாடும் - என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வளவு காலமும் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தேசிய பாதுகாப்பு என்பதைக் காட்டி ஊடகங்களை அடக்கவும் மக்களின் வாய்களை மூடவும் மக்களின் தகவல் அறியும் உரிமையை முடக்கவும் முயற்சித்தன. தற்போது தேசிய பொருளாதாரம் என்ற புதியதொரு வார்த்தையைப் பயன்படுத்துகின்றது.

தேசிய பொருளாதாரம் என்றால் என்னவென இதுவரை விளக்கமளிக்கவில்லை. தேசிய பொருளாதாரத்தை அழித்தவர்களுக்கு இதுவரை எந்தத் தண்டனையும் வழங்கப்படவில்லை. தேசிய பொருளாதாரத்தை கபளீகரம் செய்து நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

இந்நிலையில் புதிதாக ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவந்து ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களை கட்டுப்படுத்தவும் ஊடக அறிக்கையிடலையும் அரசியலமைப்பிலுள்ள தகவல் அறியும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கத்துக்குத் தேவையான செய்திகளை திட்டமிட்டு மக்களது மனங்களை குழப்பும் வகையில் முன்னெடுப்பதற்கும் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் கொண்டுவரப்படவுள்ளது. 1997 இல் சந்திரிகா பண்டாரநாயக்கவின் அரசாங்கமும் இந்த விளையாட்டையே செய்தது.

மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதி, மக்கள் ஆணையில்லாத அரசாங்கத்துடன் மக்கள் ஆணையை ஏமாற்றி இவ்வாறான செயல்களில் ஈடுபடும் செயற்பாட்டுக்கு இந்நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது.

இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும்போது அதற்கு எதிராக எமது கட்சி நீதிமன்றத்துக்குச் செல்லும். இதை நிறைவேற்ற இந்த அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை.

பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும்போது இடம்பெறும் மக்கள் போராட்டங்களை தடுக்கவும், அதனை வெளிக்கொணரும் ஊடக நிறுவனங்களை அடக்கவுமே குறித்த சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.இது மக்களின் அடிப்படை உரிமை மீறலாகும். இதற்கு எதிராக நாம் நீதிமன்றத்துக்குச் செல்வோம் என்றார்.

# ஜயவர்தனபுர வைத்தியசாலையை மேம்படுத்த திட்டம் சமர்ப்பிக்கப்படாமைக்கு அதிருப்தி

## அதிகாரிகளுக்கு எதிராக கோப் குழுவில் கடும் விசனம்






ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையை மேம்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டவட்டமான கூட்டுத் திட்டமொன்றை சமர்ப்பிக்குமாறு தொடர்ச்சியான கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் இதுவரை உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படாமை குறித்து கோப் குழுவின் தலைவர் அதிருப்தியை வெளியிட்டார்.

கோப் குழுவால் 2022.12.06ஆம் திகதி வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை பணிப்பாளர் சபையினர், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் மே 25 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். இதன்போதே கோப் குழுவின் தலைவர் அதிருப்தி வெளியிட்டார். இதன்போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையை மேம்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய கூட்டுத் திட்டமொன்றை சமர்ப்பிக்குமாறு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் இல்லாமை குறித்து குழுவின் தலைவர் அதிருப்தியை வெளியிட்டார்.

வைத்தியசாலை எந்தத் திட்டத்தை பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் அதிகாரிகளுக்குத் தெளிவான கருத்து இல்லை என்பது இதன்போது அவதானிக்கப்பட்டது. வர்த்தகப் பிரிவு, மனிதவளப் பிரிவு, சந்தைப்படுத்தல் அல்லது வர்த்தக மேம்பாட்டுப் பிரிவு இல்லாமை குறித்து குழுவின் தலைவர் வினவினார். இது அரசாங்க வைத்தியசாலையா, இலாபமீட்டும் அரச வர்த்தக நிறுவனமா அல்லது இந்த இரண்டும் சேர்ந்த ஹைபிரிட் நிறுவனமா என்பது தொடர்பில் அவர் மீண்டும் மீண்டும் வினவினார். வருகைதந்த அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்துரையாடிய பின்னர் அது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை வைத்தியசாலை சபை ஏற்றுக்கொண்டது.

மேலும், சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் ஆலோசனையோ அல்லது அறிவித்தலோ அறிவிக்கப்படாமை காரணமாக ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பில் குழப்பநிலை ஏற்பட்டிருப்பது தெரியவந்தது.

கோப் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் நீண்ட மற்றும் விரிவான விசாரணையின் பின்னர், வைத்தியசாலைக்குப் பொருத்தமான திட்டத்தை விரைவாகத் தீர்மானிக்க கோப் குழுவின் உப குழுவொன்றை நியமிப்பதற்கு தலைவரால் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கடந்த கோப் குழு கூட்டத்தை அடுத்து வைத்தியசாலையின் சபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நிறுவனம் கடந்த காலத்தில் நட்டமடைந்த வரலாற்றைக் கருத்திற்கொண்டு நிர்வாகத் திறன்கொண்ட தொழில் வல்லுநர்களை பணிப்பாளர் சபைக்கு நியமிப்பது தொடர்பிலும் நியமிக்கும் நடைமுறை தொடர்பிலும் அறிக்கை கோரப்பட்டிருந்தது.

எனினும், இது தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

வைத்தியசாலை வளாகத்துக்கு சொந்தமான காணி குறித்து நில அளவைத் திணைக்களத்தினால் சரியான கணக்கெடுப்பு



ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், அதன்பின்னர், சட்டவிரோத குடியிருப்பாளர்கள் காணியின் பகுதிகளை கைப்பற்றியுள்ளதுடன் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015இல் புதிய கட்டடம் அமைப்பதற்குக் காணியின் சரியான திட்டமொன்று தேவைப்பட்டது. அதனையடுத்து காணியை அளப்பதற்கு தனியார் அளவையாளர் ஒருவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், சில காலம் சென்று உண்மையான திட்டம் கிடைக்கப்பெற்றுள்ளமை புலப்பட்டது.

எனினும், பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபையின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்ட புதிய அளவைத் திட்டத்தில் சட்டவிரோத குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டுள்ள காணிகள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலைமையை கண்டறிந்து, அதற்கு அதிக முன்னுரிமை அளித்து நியாயமான தீர்வை முன்வைக்குமாறு கோப் குழுவின் தலைவர் உப குழுவுக்கு ஆலோசனை வழங்கினார். இக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான இந்திக அனுருத்த ஹேரத், சாந்த பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அலுத்கமகே, தயாசிறி ஜயசேகர, எரான் விக்ரமரத்ன, ஜயந்த சமரவீர, சஞ்சீவ எதிரிமான்ன, ஜகத்குமார சுமித்ராச்சி, (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய, பிரேம்நாத் சி தொலவத்த, மதுர விதானகே மற்றும் (பேராசிரியர்) சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாத்தளையில் நீர் விநியோகத் தடை

(பேருவளை செய்தியாளர்)

மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் எதிர்வரும் 05ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரையான 10 மணிநேர நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதற்கிணங்க இரத்தோட்டை பிரதான வீதி மற்றும் அதனை அண்டிய கிளை வீதிகள், ஹைநெக்க கியுல வீதி ஹீல்ஸ் ஆகிய பகுதிகளில் நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**ரிஷபம்** சுயதொழில் மூலம் நன்மைகள் இலாபங்கள் உண்டு. உடல், மன நோய்களால் சற்று தொந்தரவுகள் உண்டு.

**மிதுனம்** வீணான மனக் கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களை குறைத்துக்கொள்வது நல்லது.

**கடகம்** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப்பயணங்களில் கவனம் வேண்டும்.

**சிம்மம்** உங்கள் தேவைக்காக பணம் கிடைக்கும். மனத் துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றி கொள்வீர்கள்.

**கன்னி** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும். எச்சரிக்கை வேண்டும்.

**துலாம்** மனதில் ஒருவித பய உணர்வும் படபடப்பும் தோன்றும். வீண்டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**விருச்சிகம்** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**தனுசு** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கா விட்டால் பொருளாதாரச் சிக்கல்களை சந்திப்பீர்கள்.

**மீனம்** எதற்கும் அவசரம் வேண்டாம். மௌனம் காப்பது, தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள்.

**திதி** : திரயோதசி பி.ப.12.48 பின் சதுர்தசி (வளர்)

**நட்சத்திரம்** : சுவாதி மு.ப.6.53 வரை பின் விசாகம்

**யோகம்** : மரண யோகம் மு.ப.6.53 வரை பின் அமிர்த சித்தம்.

**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்** : மு.ப. 5.50 – 6.50 மணி வரை

**ராகுகாலம்** : 10.20 – 11.50 மணி வரை

**எமகண்டம்** : 2.50 - 4.20 மணி வரை

**குளிகை** : 7.20 – 8.50 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிஷ்டம்** : திருவாதிரை, சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : வைகாசி விசாகம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பும் அவசியம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

மலையக பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பும் அவசியம் - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், அமைச்சர் ஜீவன் தொண்டமானை நேற்று (01) சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மலையக பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பும் அவசியம். அதற்காக உரிய ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு வேண்டுகிறேன் என்றார்.

நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு ஐக்கிய இராச்சியம் வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்த ஜீவன் தொண்டமான், மலையக மக்களின் தற்போதைய



நிலைவரம் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், மலையக மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

# மாவனல்லையில் முதலுவிப் பயிற்சி

மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி பழைய மாணவியர் சங்கத்தினரும் மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவியர் சங்கத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சென். ஜோன்ஸ் முதலுதவி பயிற்சி முகாம் மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையின் கனிஷ்ட பிரிவு கேட்போர் கூடத்தில் நாளையும் (03) நாளைமறுதினமும் (04) நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கேகாலை முதலுதவி பயிற்சிப் பாசறையின் பயிற்றுவிப்பாளர்கள் பயிற்றுவிக்கும் இப் பயிற்சிப் பட்டறையில் இக்கல்லூரிகளில் கல்வி கற்றவர்களும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ஹஸனின் மறைவு தமிழ் இலக்கிய உலகுக்கு பேரிழப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம் அனுதாபம்

(இக்பால் அலி)

தமிழியல் ஆய்வு, இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் பங்காற்றிய முன்னாள் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். ஏ. ஹஸனின் மறைவு தமிழ் இலக்கிய உலகுக்கு பேரிழப்பாகும் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

தமிழியல் ஆய்வு, இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் பங்காற்றிய முன்னாள் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். ஏ. ஹஸனின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,எஸ். எம். ஏ. ஹஸன் குறுநாவல், சிறுவர் பாடல்கள் உட்பட பல ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொணர்ந்த பன்னூலாசிரியர். இவருடைய வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் சமூகத்துக்காற்றிய சேவையை கண்டி மக்கள் பெரு விழா எடுத்து பாரட்டியுள்ளார்கள்.

இவர் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, முஸ்லிம் சமய கலாசார அமைச்சு, மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு, மலைநாட்டுக் கலை மன்றம், இலங்கை தென்கிழக்கு ஆய்வு மையம், உலக இஸ்லாமிய மாநாடுகளில் பட்டமும் விருதுகளும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்ட சிறப்புக்குரியவராவார்.

1969 பதியுதீன் மஹ்மூத் வாழ்க்கைச் சுருக்கம், 1973 அல் அருள்வாக்கி அப்துல் காதர் புலவர், 1975 இல் நான் கண்ட பண்டாரநாயக்க, கலாநிதி பதியுதீன் வாழ்க்கை வரலாறு, 1976 நெஞ்சத் தாமரையின் இன்ப நினைவுகள், 1976 இல் கம்பன் கவியமுதம், 1978 இல் அமெரிக்க கறுப்பின முஸ்லிம்கள், 1979 யசஹாமி சிறுவர்களுக்கான குறுநாவல், 1997 இல் வைத்தியதிலகம் அப்துல் அஸீஸ், 1998 இல் அல்லாமா இக்பால் ஓர் அறிமுகம், 1993 இல் இக்பாலின் இதயப் புதையல், 2000 யசஹாமி தமிழ் மொழிபெயர்ப்பு எனப் பல தரப்பட்ட நூல்களைத் தந்தவர். இவர் என்னுடைய அரசியல் வாழ்க்கையிலும் நீண்ட காலம் நட்புறவோடு பழகி வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வந்த ஓர் இனிய நண்பர்.

இத்தகைய பெரியாரின் இழப்பு காரணமாக துயருற்றுள்ள அவரது குடும்பத்தினர்கள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்கவும் இறைவனை வேண்டுகிறேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




நுண்ணறிவு வினாவிடை

வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II வழிகாட்டி செயலட்டை

பரீட்சைக்கு தேவையான அனைத்து தகவல்களுடன்...

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விற்பனை பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்

விலை ரூ.60 மட்டுமே

தொடர்புகளுக்கு 0768313896

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 02ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

## மருத்துவ சேவையை விரைந்து கவனிக்க வேண்டும் அரசாங்கம்

நாட்டின் பிரதான வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை, மருத்துவர்களின்மை போன்ற பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

கண்டி தேசிய வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ள இரண்டு இதய வடிகுழாய் இயந்திரங்களில் ஒன்று கடந்த 06 ஆம் திகதி முதல் முழுமையாக செயலிழந்து - பழுதடைந்துள்ளது.

இதன் காரணமாக இருதய நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கும் சுமார் 8,000 நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருதயத்தில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சைகளை வழங்கும் செயற்பாட்டை இந்த இயந்திரம் செய்கின்றது. அதற்காகப் பயன்படுத்தப்படும் 14 இதய வடிகுழாய் இயந்திரங்கள் நாடளாவிய ரீதியில் உள்ள 11 வைத்தியசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2 கண்டி தேசிய வைத்தியசாலையில் உள்ளன.எனினும், 2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இயந்திரம் கடந்த 06 ஆம் திகதி முதல் முழுமையாகப் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு வங்குரோத்து அடைவதாக வெளியிடப்பட்ட அறிவிப்புக்குப் பின்னர் கடந்த ஓராண்டில் முந்நூற்று எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்களும் கிட்டத்தட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். வைத்தியசாலைகளில் சிகிச்சை நடவடிக்கைகள் கடும் நெருக்கடியை எட்டியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

விஷேட வைத்தியர்கள் மற்றும் ஏனைய வைத்தியர்கள் பற்றாக்குறையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, அனுராதபுரம், தங்காலை, ஹம்பாந்தோட்டை, தெஹியத்தகண்டிய உள்ளிட்ட பல அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை நிலையங்கள் மற்றும் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்வதும் பாரியளவில் பின்னடைந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு , லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிறுநீரகப் பரிசோதனை இயந்திரங்கள், புற்றுநோயைக் கண்டறியும் கருவிகள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கம்பஹா அரசினர் அடிப்படை வைத்தியசாலையில் நிலவும் மருந்துப் பற்றாக்குறைக்குத் தீர்வாக நன்கொடையாளர்களிடம் இருந்து தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் டொக்டர் ஹிமாலி விஜேகுணசேகர தெரிவித்துள்ளார். இதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த நடவடிக்கையை எடுக்க முடிவு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல வைத்தியசாலைகளில் கொலஸ்ட்ரோல், இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கான மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாகவும், இந்த மருந்துகளின் பட்டியலை நன்கொடையாளர்களிடமிருந்து பெறுவதற்காக இந்த மருந்துகளின் பட்டியல்கள் சமூக நலன்புரி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விஷேட வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக தெஹியத்தகண்டிய வைத்தியசாலை மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, அநுராதபுரம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய வைத்தியசாலைகளிலும் பணிகள் முடங்கியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டை விட்டு வெளியேறும் விஷேட வைத்தியர்கள் மற்றும் ஏனைய வைத்தியர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளது. இதற்கிடையில், மருத்துவ, சிறப்பு, குழந்தை, அறுவைச் சிகிச்சை, மகளிர் மற்றும் மகப்பேறியல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களின் தொடர்ச்சியான வெளியேற்றம் காரணமாக பல பெரிய மருத்துவமனைகளின் சேவைகள் செயலிழந்துள்ளன.

இதய நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், கல்லீரல் நோயாளிகள் மற்றும் புற்றுநோயாளிகள் கூட நீண்ட காலமாக மருத்துவமனைகளுக்கு வருவதால், தற்போதைய மருத்துவ பற்றாக்குறைக்கு மேலதிகமாக மருந்துகள் மற்றும் அறுவைச்சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையும் இந்த நோயாளிகளைக் கடுமையாகப் பாதித்துள்ளது என்றே செய்திகள் கூறுகின்றன.

கடந்த காலங்களில் கொரோனா தொற்றினால், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் அவற்றைச் சமாளித்து வந்தாலும் அத்தியாவசியமானதும் அவசரமானதுமான இந்த மருத்துவ தேவைகளை சாதாரண மக்கள் எவ்வாறு சமாளிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

மதப்பிரச்சினை , அரசியல் சர்ச்சைகள் என்று மக்களுக்குதவாத பிரச்சினைகளைத் தீர்க்க நேரம் செலவிட்டுக்கொண்டிருக்கும் அரசாங்கம் இந்த முக்கியமான பிரச்சினையை தீர்க்க முன்னுரிமை அடிப்படையில் செயற்படவேண்டும்.

தனியார் மருத்துவமனைகள் கூடுதலாக மருந்துகளை வாங்கி வைத்திருப்பதால் தற்போது பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளவில்லை. ஆனால், சாதாரண மக்கள் அனைவராலும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவம் பெறுவது இயலாத விடயம். அரசின் விரைவு நடவடிக்கையே தேவை.

# வெறுப்பதின் நன்று துறப்பது

**கிருங்கை சேதுபதி**

மனிதனைத் தவிர, வேறு எந்த உயிரும் சென்றதை நினைத்துக் கவலை கொள்வதில்லை. மனிதன் இடைவெளியின்றிக் கவலைகளால் மட்டுமே இயங்கினால் அவன் வாழ்க்கை எவ்வாறு உயிர்ப்புடன் இருக்கும்? கவலைக்கு மருந்து மது என்று மயங்குகிறது மனம். அதையே எதார்த்த வாழ்க்கை பல்வேறு நிகழ்வுகளின் மூலம் நியாயப்படுத்துகிறது. படக்காட்சிகள் மட்டுமல்ல, பார்வையில் படுகிற எல்லாக் காட்சிகளும் மதுக்கடைகளை நோக்கிய பாதையையே முன்னிறுத்துகின்றன.

"குடி குடியைக் கெடுக்கும்'' என்கிற வாசகத்தைப் படித்துக்கொண்டே குடிக்கிற பழக்கம் எப்படி வந்தது? தீதெனத் தெரிந்தே பயன்படுத்தும் தீமையை ஒரு பழக்கமாகத் தொடங்கி, வழக்கமாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து விடுபட முடியாமல் அதற்கே அடிமையாகி விட்டு, சுதந்திர புருஷர்களாய் நம்மை நாமே நினைத்துக் கொள்வது சரியாகுமா?



புலாலும் கள்ளும் உட்கொள்ளும் வகைசார்ந்தவை. புலால் அருளாளர்களுக்கு மறுக்கப்பட்டது; அது அறம் சார்ந்தது; அன்பே அதற்கு அடிப்படை. "புலால் மறுத்தல் என்றே அந்த அதிகாரத்திற்குத் தலைப்பிட்டிருப்பார் திருவள்ளுவர்; அருளுடைமைக்குப் பின்னும் தவத்திற்கு முன்பும் அவ்வதிகாரத்திற்கு இடம் கொடுத்திருப்பார்.

புல் அல்லாத உணவை, அதாவது, தாவர உணவைத் தவிர, ஏனையவற்றை மறுத்துவிடுதல்-தவிர்த்துவிடுதல் வேறு; மறுத்துவிடுதல் வேறு. மறுத்தல் மனம் சார்ந்தது; தவிர்த்தல் செயல் சார்ந்தது. மறுக்கிற மனம் ஆசையைத் துறக்கிற மனம். அதன்வழி துன்பத்தைத் தவிர்க்கப் பழக்குவது அறம். இவையிவை இன்றியமையாதவை என்று உரிய ஒழுகலாறுகளை வரையறுத்துச் சொல்வது அறம். தவிர்த்தல் என்பது அதன் உட்கிடக்கை.

மனப்பக்குவத்தால், மருத்துவத் தேவையால், உணர்வுச் செறிவினால் வளர வேண்டிய ஒழுக்கம் புலால் மறுத்தல். "வாயைக் கட்டினால், வயிற்றைக் கட்டலாம்; வயிற்றைக் கட்டினால், வாழ்வைக் கட்டலாம்'' - என்பது என் தந்தையின் அறிவுரை. "உடம்பைக் கட்டினால் உயிரைக் கட்டலாம்'' என்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். "உடம்பால் அழியின் உயிரால் அழிவர்'' என்பார் திருமூலர்.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்பது போய், ''உடம்பைக் கெடுத்தேன் உயிர் கெடுத்தேனே'' என்கிற நிலையில் மருத்துவரிடம்போய், உயிர் காக்கச் சொல்லி மன்றாடினால் ஏது பயன்?

"உணவே மருந்து மருந்தே உணவு'' என்பது நமது மரபு. உணவெனப்படுவது உடல் சார்ந்தது மட்டுமல்ல, உணர்வும் சார்ந்தது. "உழைக்காமல் சாப்பிடுகிற உணவு உடலில் ஒட்டாது என்பார்கள் மூத்தவர்கள்.

"மது, மாது இரண்டால்தான் இன்பம் என்கிற மயக்கம் எல்லாருக்குள்ளும் திணிக்கப்பட்டிருக்கிறது. பின்னதில் இன்னோர் உயிர் இருக்கிறது; ஆனால், முன்னதில் நாம் மட்டுமே இருக்கிறோம் என்கிற நிலையில், தன்னளவில் கெடுவது பரவாயில்லை என்று தொடங்கி, தன் நலம் கெடுத்து, குடும்ப நலம் சிதைத்து, சமூகக் கேட்டிற்கும் வித்திடுகிற இடத்தில் இந்தப் போதைக்கு அடிமையாகும் போக்கு இருக்கிறது.

மதுவின் தன்மை வேறு; தரம் வேறு. ''களித்திருக்க விரும்புவோர் கள்ளுண்பர்.'' உழைத்துக் களைத்தவர்கள் ஓய்ந்திருக்கக் கள்ளுண்பர். அது கூட, களிப்புத் தருமா என்பது ஐயம். "கள்ளுண்டு களித்தானைக் காரணம் காட்டுதல் என்பது, தண்ணீருள் மூழ்கிய ஒருவனைத் தீவட்டி கொண்டு தேடுவதை ஒத்தது'' என்றார் திருவள்ளுவர். (குறள்: 929)

ஆனாலும், சிலருக்கு இன்றியமையாத தேவையாக இந்த மது இருக்கிறது என்போர் கருத்து, திருவள்ளுவர் காலத்திலேயும் இருந்திருக்கிறது போலும். அதனால்தான், "உண்ணற்க கள்ளை என்று ஒதுக்கச் சொன்ன திருவள்ளுவர், "உணில் உண்க'' என்று அனுமதியும் கொடுக்கிறார். யாருக்கு? "சான்றோரால் எண்ணப்பட வேண்டாதவர்களுக்கு. எல்லார்க்கும் இல்லை. ஆக, சான்றாண்மை கொல்லும் அளவிற்கு வல்லமை உடையது 'கள்' என்பது அவர்தம் கணிப்பு.

பெண்ணுக்குக் கற்பையும் ஆணுக்குச் சான்றாண்மையையும் வலியுறுத்திய அவர், "ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'' என்று அறுதியிட்டு உரைக்கிறார். தன்னைத்தான் கொண்டு ஒழுகத் தெரியாதவர்கள்தான் தன்னை அவமதிக்கிறார்கள்; பெண்ணை இழிவுபடுத்துகிறார்கள்; பிறரைத் துன்புறுத்துகிறார்கள்.

''சான்றோர் இல்லாத ஊர் உருப்படாது''. அதனால்தான், தன் கால் சிலம்பினை விற்கச் சென்ற தன் கணவனைக் கள்வன் என்று கொன்ற மூதூர் பார்த்துக் கண்ணகி கேட்டார் "சான்றோரும் உண்டுகொல்'' என்று. சீதையைச் சிறைப்படுத்திய இலங்கையைப் பார்த்து அனுமன், "களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரைக் காண்கில்லேன் என்கிறான். "சுக்ரீவன் தன்னைக் காத்த தலைவனாம் இராமனுக்கு முன்னர் கொடுத்த வாக்கை மறந்து மூழ்கியது இந்தக் கள்ளினால்தான் என்று காட்டுகிறது இராமாயணம்.

பண்டைக்காலத்தில் இருந்தே கள்ளும் உணவாய் இருந்ததைப் பலரும் சொல்லிக் காட்டுகிறார்கள். அக்காலத்தில் இருந்தே அதன் தீமையையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்களே.

கள்ளானது, முதலில் கொடுத்த வாக்கை மறக்கச் செய்யும்; பின்னர் வாழ்க்கையையே மறக்கச் செய்யும் என்பதற்குக் குரங்கைக் கொண்டு விளக்கியது வெறும் பொழுதுபோக்குக் கதைக்காகவா? இத்தனைக்கும் தன்னைக் கொன்ற இராமனின் முன் சாகும் தறுவாயில் வாலி சொல்கிறான். "உன்னிடம் ஒன்று வேண்டுகிறேன். என் இளவல் சுக்ரீவன்,

பூஇயல் நறவம் மாந்தி புந்தி வேறு உற்ற போழ்தில்,
தீவினை இயற்றுமேனும்,எம்பிமேல் சீறி
என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவன்
என்றான்

"கள் உண்பதால் புத்தி மாறும். நல்லதற்குப் பதிலாகத் தீமை செய்வான். அப்போது அவன் மேல் கோபம் கொண்டு, என்னைக் கொல்ல ஏவிய அம்பினை அவன் மேல் ஏவிவிடாதே என்று அவன் தன் தம்பிக்காக மட்டுமா வேண்டினான்? அப்படியே சுக்ரீவன் நடந்தும் கொண்டானே... அது எத்தகு நம்பிக்கைத் துரோகம்? கைம்மை நோன்பு நோற்ற தாரை தன் கூட்டத்தாருடன் வந்திருக்காவிட்டால் கிட்கிந்தை என்னவாகி இருக்கும்?

தன் கவலையை மறக்க மதுவை நாடும் மனிதன் பொதுக்கவலையைப் புறந்தள்ளிவிடுகிற அவலம் அப்போது வந்துவிடுகிறது. தனக்குள்ளேயே குற்றத்தை வைத்துக் கொண்டு, குற்றவாளியாக மறுகும் ஒருவன் எவ்வாறு சமூகக் குற்றங்களைச் சரி செய்ய முடியும்? சமூகக் குற்றம் இருக்கட்டும், தன் குடும்பச் சிக்கல்களுக்குக் கூட நடுநிலையோடு நின்று கருத்தளிக்க முடியாத குற்ற உணர்வைத் தந்துவிடுகிறதே. பிறகு அதையே நியாயப்படுத்தும் நிலைக்கு வருவது எத்தகு அவலம்?

தனிவாழ்வில், நியாயவாதியாக இருக்க முடியாத ஒருவனால் பொதுவாழ்வில் நீதி சொல்ல முடியாது; சொன்னாலும் உலகம் ஏற்காது.

ஒருவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று சக மனிதன் இருக்க இயலாது. காரணம், மனிதன் தனிமரமல்லன். கூட்டமாய் வாழும் குணத்தன். கூடைப் பழங்களில் ஒன்று அழுகினாலும் கூட மீதம் இருக்கும் பழங்களும் அழுகிப்போகும். அழுகுமுன் பயன் கொள்ளத் தெரியாமல் கூடைப் பழங்களைக் கொட்டுவதால் யாது பயன்? அதைவிடக் கொடுமை பிஞ்சிலே பழுத்தல். அது வெம்புதல். இந்த மதுவை நினைத்துத் தனக்குத் தானே வெம்பும் நிலை கூடக் குறைந்து வருகிறது. வெறுமைக்காக, வறுமைக்காக, பெருமைக்காகக் குடிப்பவர்கள் போய் இப்போது அது இல்லாமல் இருக்கவே முடியாது என்பவர்கள் பெருகிக்கொண்டு வருகிறார்கள்.

எப்போதும் கூடவே இருக்கும் உடலைப் பேணாது விடுப்பது தன்னல மறுப்பாகத் தெரியலாம். தன் குடும்பத்தார்க்கும் சந்ததியார்க்கும் உரிய பொதுநலத்தையும் கெடுப்பது அது என்பதை உணர மறுப்பதுதான் உறுத்துகிறது. உடல் நலத்தையும் பொது வளத்தையும் புறக்கணிக்கும் ஆபத்து அதனால் வருவதால் கள்ளுண்ணாமை அதிகாரத்தை அறத்துப்பாலில் வைக்காமல் பொருட்பாலில் வைத்துப் புரியவைக்கிறார் திருவள்ளுவர்.

அறத்தையும் பொருளையும் மறப்பதன் மூலமாக இன்பத்தையும் இழக்கிற மனிதர்களை எச்சரிக்க, "நஞ்சுண்பார் கள் உண்பவர் என்கிறார் திருவள்ளுவர். கள்ளைச் சொல்ல வந்த அவர் அதற்கு முன்னதாக நஞ்சு என்று அவசரமாய்ச் சொன்னது கவிதை நயத்திற்காகவா? அதற்கு முன்னதாக, "துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் என்கிறார்.

அது தூங்குவோரைக் குறிக்காது குடித்து மயங்கி, எங்கு கிடக்கிறோம் என்கிற உணர்வே அற்று, கால் வைக்கக் கூட அருவருப்பு அடையும் இடத்தில் கிடக்கும் மனிதர்களைக் குறிப்பது. எந்தக் கவலையும் படாமல் அவர்களைக் கண்டும் காணாது போகும் மனநிலை இப்போது பலருக்கு இயல்பாகிவிட்டதே.

அந்த நிலையில் கிடக்கும் மனிதர்க்கு மனைவி, குழந்தைகள் இருப்பார்களே என்கிற கவலையை எப்படித் துறப்பது? நன்மை - தீமை இன்னதென்றே அறியாத பிள்ளைகளை இந்தப் பழக்கம் தொற்றிக் கொண்டிருப்பதுதான் எல்லோர்க்கும் பெருங்கவலை அளிக்கிறது.

வாக்களிப்பதற்கும், வாழப்புகும் திருமணத்திற்கும் வயது வரம்பு வைத்து உறுதிப்படுத்தும் ஒரு கடப்பாடு, மதுவருந்துவோர்க்கும் கொண்டுவரலாகாதா என்று ஏங்குகிறது சான்றோர் உள்ளம்.

உயிர் இயற்கையான காமத்தைத் துறக்க முடிந்த மனிதர்களால் தாம் கண்டுபிடித்த செயற்கை மதுவைத் துறக்க முடியாததுதான் துயரத்திலும் துயரம். அதற்கான நியாயங்களைக் கற்பிப்பது அவலத்தினும் அவலம்.

மதுவை வெறுப்பதை விட மறப்பது நல்லது; அதைவிடவும் அறவே துறப்பது மிகவும் நல்லது. அதற்கு, மதுக்கடைகளைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் அப்பால், அதனைத் துறக்கிற மனத்தை உருவாக்குவதுதான் இன்றைய இன்றியமையாத தேவை.

## நக்கல் நமசிவாயம்

**கோழி, ஆடு, மாடுகள இன்சூரன்ஸ் பண்ண போறாங்களாம்.. அதுசரி, காலப்போக்கில உதுகள் மட்டும்தானே நாட்டில இருக்கப்போகுதுகள்...**



## இன்றைய நாளில்...

- 1896 – மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த கம்பியில்லாத் தந்திக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1964 – பலஸ்தீன விடுதலை இயக்கம் அமைக்கப்படட்து.
- 1966 – நாசாவின் சேர்வெயர் 1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.
- 1999 – பூட்டானில் முதற்றடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2012 – முன்னாள் எகிப்திய அரசுத்தலைவர் ஹோஸ்னி முபாரக் 2011 எகிப்தியப் புரட்சியின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வன்முறையை ஏவி விட்ட குற்றத்திற்காக அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.
- 2014 – தெலுங்கானா அதிகாரபூர்வமாக இந்தியாவின் 29ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

# வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலய நிர்வாகத்தினர் எதிர்நோக்கிவந்த பாதைப் பிரச்சினையை தீர்த்து வைத்தார் சார்ள்ஸ் எம்.பி.




(மன்னார் நகர் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலய நிர்வாகத்தினர் எதிர்நோக்கிவந்த பாதைப் பிரச்சினை தொடர்பில் ஆராய ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கமைவாக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார்.

ஆலயத்தின் உற்சவ காலத்தில் தீர்த்தம் எடுத்துச்செல்வதற்கான பாதை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது. அப்பகுதிக்குச் சென்று தீர்த்தம் எடுப்பதற்குரிய அனுமதி பல வருடங்களாக இராணுவத்தினரால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஆலய நிர்வாகத்தினர் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்ததன் பிரகாரம் நேற்று முன்தினம் (31) சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி, கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர் சகிதம் விஜயம் மேற்கொண்டனர்.

மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பாகவும் இப்பாதையின் தேவை தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இராணுவக் கட்டளை அதிகாரிக்கு தெளிவுபடுத்தியதன் பிரகாரம் இனிவரும் காலங்களில் இடையூறின்றி தீர்த்தம் எடுப்பதற்குரிய அனுமதி மாவட்ட இராணுவ க் கட்டளைத் தளபதியால் வழங்கப்பட்டது.

இது தொடர்பான அனுமதி எழுத்துமூலம் வழங்கப்படுமெனவும் இராணுவ உயரதிகாரி தெரிவித்தார்.

மீள்குடியேற்றத்தின் பின்பு தொடர்ச்சியாக இப்பகுதி மக்கள் எதிர்கொண்டு வந்த இப்பிரச்சினையை பாராளுமன்ற உறுப்பினர் சுமுகமாகத் தீர்த்துவைத்தமைக்கு அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# அச்சுவேலியில் வீடொன்றிலிருந்து கூரிய ஆயுதங்கள் மீட்பு; இளைஞன் கைது!



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம்ம அச்சுவேலி பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் இளைஞன் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலினடிப்படையிலேயே அச்சுவேலி மேற்கிலுள்ள வீடொன்றை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன்போது வீட்டிலிருந்த கஜேந்திரா வாள்கள் நான்கை கைப்பற்றியதுடன் வீட்டிலிருந்த இளைஞனையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்த இளைஞனையும் மீட்கப்பட்ட ஆயுதங்களையும் மேலதிக சட்ட நடவடிக் கைக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.




**படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் அதன் தலைவர் ப.கார்த்தீபன் தலைமையில் நடைபெற்றபோது அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி, ஒளிதீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (வவுனியா நிருபர்)**

# நெல்லியடியில் பரீட்சை முடிந்து திரும்பிய மாணவிகளுடன் சேஷ்டை

## தடுத்த மாணவர் மீது தாக்குதல்

(யாழ். நிருபர்)

சாதாரண தரப் பரீட்சையை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவிகளுடன் சேஷ்டை விட்ட இளை ஞர்களிடமிருந்து மாணவிகளைக் காப்பாற்ற முற்பட்ட மாணவன் மீது இளைஞர்கள் தலைக்கவசத்தால் தாக்கியுள்ளனர்.

நெல்லியடி பகுதியில் நேற்று முன்தினம் (31) புதன்கிழமை மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

பாடசாலைப் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை முடிவுற்றதும் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகளுடன் பாடசாலைக்கருகில் மோட்டார்சைக்கிளுடன் நின்ற இரு இளைஞர்கள் சேஷ்டை புரிந்ததுடன், விரும்பத்தகாத வகையிலும் நடந்து கொண்டுள்ளனர்.

அவ்வேளை பரீட்சையை முடித்துவிட்டு வந்த சக மாணவன் இளைஞர்களிடமிருந்து மாணவிகளைப் பாதுகாக்கும் முகமாக செயற்பட்டபோது இருவரும் மாணவனை தலைக்கவசத்தால் மூர்க்கத்தனமாகத் தாக்கிவிட்டு அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவ மாணவிகளால் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, விரைந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மோட்டார்சைக்கிள் உரிமையாளரைக் கைதுசெய்ததுடன் அவரது மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

அவருடன் சென்ற மற்றைய நபர் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தின் மின் துண்டிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் அமைக்கப்பட்டு 5 வருடங்களாகத் திறக்கப்படாமலுள்ள வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தின் மின்சாரக் கட்டண நிலுவை 4 இலட்சத்தைக் கடந்துள்ளதால் குறித்த பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் 291 மில்லியன் ரூபா செலவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு அங்கு 55 கடைத் தொகுதிகளும் உள்ளன.

குறித்த பொருளாதார மத்திய நிலையமானது கடந்த 5 வருடங்களாக திறக்கப்படாதுள்ள நிலையில், அதன் மின்சாரப் பட்டியலுக்கான கொடுப்பனவு நிலுவை 4 இலட்சத்தைக் கடந்துள்ளது.

தனித்தனிக் கடைகளுக்கான மின்சாரப் பட்டியல்களின் ஒருமித்த தொகையே 4 இலட்சத்தைக் கடந்துள்ளது. இதன் காரணமாக குறித்த பொருளாதார மத்திய நிலையத்திற்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு கடமையிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த பொருளாதார மத்திய நிலையமானது திறக்கப்படாதபோதும் கொவிட் தொற்று காலப்பகுதியில் குறிப்பிட்ட சில மாதங்கள் அது சிகிச்சை நிலையமாக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரிடம் கேட்டபோது,

குறித்த பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்படாதபோதும் கொவிட் தொற்றாளர்களின் பராமரிப்பு நிலையமாக தொழிற்பட்டது. ஆனால், பொருளாதார மத்திய நிலையம் திறப்பதற்கு முன் மின்கட்டண நிலுவை செலுத்தப்பட்டு மீள் மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

# ராஜகுமாரியின் மரணத்துக்கு நீதிகோரி கந்தப்பளையில் மக்கள் போராட்டம்




ஆ.ரமேஸ்

வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில், திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த ராஜகுமாரியின் மரணத்துக்கு நீதிகோரி கந்தப்பளை நகரில் நேற்று (01) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதுளையைச் சேர்ந்த ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது.

சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் கீழ் இயங்கும் கிராம அபிவிருத்தி மன்றங்களின் ஒன்றியம் அதன் திட்ட உத்தியோகஸ்தர்களான பி. அம்பிகா மற்றும் ஜெ.கிருஷாந்தி ஆகியோரின் தலைமையில் முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் கந்தப்பளை மற்றும் இராகலை பகுதி தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது குடும்ப பொருளாதார சுமையை சுமந்து கொண்டு பதுளையில் இருந்து கொழும்பில் நடிகை சுதர்மாவின் வீட்டில் பணியாளராக வேலை செய்து வந்த இந்த இளம் தாய் மீது திருட்டுக் குற்றம் சுமத்தி பொலிஸ் முறைப்பாடு செய்து வெலிக்கடைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு விசாரணை நடத்தியபோதே மரணமடைந்துள்ளார்.

இவரின் மரணம் மர்மமானது - நியாயமற்றது. இந்த இளம் தாயின் மரணத்திற்கு நீதி வேண்டுமென்றே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மர்மமான முறையில் மரணமடைந்த ராஜகுமாரிக்கு நீதி கோரி பதாகைகளை ஏந்தியவண்ணம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் வீட்டுப் பணியாளர்களுக்கு நீதி வேண்டும், வீட்டுப் பணியாளர்களுக்கான தொழில்சட்டத்தை அரசு உடனடியாக அங்கீகரிக்க வேண்டும், மலையகப் பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும், உலக தொழிலாளர் சம்மேளனத்தில் அமுல் படுத்தப்பட்ட சமவாயத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பினர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# உறுதியான நிலைப்பாட்டில் இருந்தவர் அமரர் லோரன்ஸ்

## இரங்கல் செய்தியில் வேலுகுமார் எம்.பி. புகழாரம்

மலையக மக்களின் அடையாளம் மற்றும் இருப்பு தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர் அமரர் லோரன்ஸ் என கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் அ. லோரன்ஸின் மறைவுக்கு வேலுகுமார் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மலையகம் எங்கள் தாயகம் - நாம் ஒரு தேசம்'' என்ற நிலைப்பாட்டில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தவர். மலையக மக்கள் தனியொரு தேசிய இனமாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும், மலையக மக்களுக்கான தனியொரு அரசியல் அலகு உருவாக்கப்பட வேண்டுமென்பதிலும் முன்னின்று செயற்பட்டவர்.

பல்வேறு மாற்று நிலைப்பாடுகள், அரசியல் நெருக்கடிகள், கருத்து முரண்பாடுகள் எழுந்தபோதெல்லாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்காமல்- பின்வாங்காமல் தனது உறுதியான நிலைப்பாட்டிலேயே இருந்தவர்.



பல அரசியல் தலைமைகளுக்கு பின்புலத்தில் பலம் சேர்த்து மக்கள் நலனுக்காக செயற்பட்டவர். எனினும், பிரதிநிதித்துவ அரசியலில் அவருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. அது ஒருவகையில் மலையக மக்களின் துரதிர்ஷ்டம். எது எவ்வாறாயினும், அன்றும் அவர் சொன்ன, இன்றும் அவர் விட்டுச்சென்ற, மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக முன்னின்று செயற்படுவது நாம் அவருக்கு பெற்றுக்கொடுக்கும் கௌரவமாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# இராகலை தோட்ட மக்களுக்கு பிரித்தானிய அரசு உதவிக்கரம்

ஆ.ரமேஸ்

நுவரெலியாவில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக பிரித்தானிய நிதியுதவியின் கீழ் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இராகலை சென் லெனாட்ஸ் தோட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டப்பட்டது.

நுவரெலியா செஞ்சிலுவைச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் இராகலை செஞ்சிலுவைப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு இராகலை சென் லெணாட்ஸ் தோட்டத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் கலந்து கொண்டு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த சென் லெனாட்ஸ் தோட்ட மக்களுக்கு உதவு தொகையை வழங்கி வைத்தார்.

அத்துடன் உதவு தொகைகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளையும் அவர் நேரில் கேட்டறிந்தார்.

மேலும் பிரித்தானிய நிதியுதவியின் கீழ் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இராகலை சென் லெனாட்ஸ் தோட்டம் மற்றும் மகா ஊவா தமிழ் வித்தியாலயங்களில் மேற்கொண்டு வரும் சுகாதாரம் மற்றும் உணவு வழங்கும் வேலைத் திட்டங்கள் குறித்தும் மாணவர்களுடன் மகிழ்ந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு! 42ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள்





யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு 42 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு நேற்று (01) நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பிரதம நூலகர் ராகினி நடராஜ் தலைமையில் நேற்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நூலக வளாகத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வின்போது யாழ்ப்பாண பொது நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா, யாழ்ப்பாண பொது நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளார் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ. மாநகர ஆணையாளர் ம.ஜெயசீலன், நூலக ஊழியர்கள், வாசகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகக் காணப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகமானது 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் ஆம் திகதி வன்முறைக் குழுவொன்றினால் எரிக்கப்பட்டது.

யாழ். நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில் அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவக் கழிவுகளை கோம்பயன்மணலில் எரிப்பதற்காக எரியூட்டி நிறுவுவதற்கு ஏற்பாடு

## யாழ்ப்பாண ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டியை கோம்பயன்மணல் மயானத்தில் நிறுவுவதற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டி நிறுவுவதற்கு யு.என்.டி.பி. நிறுவனம் நிதியுதவி வழங்கியிருந்தது. எரியூட்டி அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் நீண்ட இழுபறிநிலை நிலவியது. ஒவ்வொரு இடத்திலும் பொதுமக்கள் எதிர்ப்புகள் தெரிவித்தமையால் இடத்தெரிவில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (31)யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி பங்கேற்று இது தொடர்பான விளக்கங்களை முன்வைத்தார்.

மருத்துவக் கழிவுகள் (கிளினிக்கல் வேஸ்ட்) என்பதில் உடலின் சில பாகங்கள், குருதி, சிறுநீர் போன்றவைதான் இருக்கும். முழுமையான உடலைத் தகனம் செய்கின்றார்கள். அதில் சில கழிவுகள் எஞ்சும். ஆனால், மருத்துவக் கழிவுகளை எரியூட்டிகள் ஊடாக தகனம் செய்யும்போது எவையும் மிஞ்சாது. சூழலுக்கு எரியூட்டி ஊடாக புகை செல்வதே தெரியாது. எரியூட்டியில் முதலில் 650 டிகிரியில் மருத்துவக் கழிவுகள் தகனம் செய்யப்படும். பின்னர் 800 தொடக்கம் ஆயிரம் செல்சியஸ் வெப்பத்தில் அவை இரண்டாவதாகத் தகனம் செய்யப்படும். இதனால் சூழல் பாதிப்பு ஏற்படாது. இதை மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குத் தெளிவூட்டவேண்டும். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் சிறிய எரியூட்டி உள்ளது. எதிர்காலத்தில் அதுவும் இயக்கப்படும் என்று பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா இதுகுறித்து குறிப்பிடுகையில், கோம்பயன்மணல் மயானத்தில் ஏற்கனவே உடல்கள் எரியூட்டப்படு கின்றன. அங்கே மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு எதிர்ப்பு இருக்காது என்ற கருத்தை முன்வைத்தார். மக்களின் கருத்துகளைக் கேட்டு முடிவு செய்யலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சுட்டிக்காட்டினார். அதேபோன்று யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், மாநகரசபையில் மக்கள் பிரதிநிதிகள் இருந்தபோது இது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. மக்களின் கருத்துகளைக்கேட்டு அதற்கமைவாகச் செயற்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கோம்பயன்மணல் மயானச் சபை சார்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதி, எரியூட்டி அமைப்பதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். எரியூட்டியின் புகைப்போக்கியின் உயரம் 22 மீற்றராகும் என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே, சூழல் பாதிப்பு ஏற்படாது என்ற வகையில் நாமும் இணங்குகின்றோம் என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், இ.அங்கஜன் மற்றும் வடக்கு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இணக்கம் தெரிவித்தனர்.இதேவேளை, மயானம் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானது என்ற அடிப்படையில் எரியூட்டி அமைப்பது தொடர்பில் போதனா வைத்தியசாலை மாநகர சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவேண்டுமென்று மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் கேட்டுக்கொண்டதையும் ஒருங்கிணைப்புக்குழு ஏற்றுக்கொண்டது.

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(நடராஜா மலர்வேந்தன்)

லுணுகலை ஸ்ரீ இராமக்கிருஷ்ணா தமிழ் கல்லூரியின் வருடாந்த பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை 03 ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் டீ. சுந்தரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிதாக அதிபர் பதிவியேற்றதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற முதலாவது பழைய மாணவர் சங்க ஒன்றுகூடலில் கல்லூரியின் எதிர்கால கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக பழைய மாணவர்களின் பங்களிப்பு பற்றிய முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் எஸ். சந்திரமோகன் அழைப்பு விடுத்துள்ளார்.

# நொதேர்ன் பவர் நிறுவனம் யாழில் மீள செயற்படுவதற்கு முயற்சித்தமை உண்மை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவதற்கு காரணமான நொதேர்ன் பவர் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் மீளச் செயற்படுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டமை உண்மையாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.இதன்போது சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமையால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுன்னாகத்தில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமையால் பாதிப்புக்குள்ளான ஆயிரத்து 372 பேருக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களின் கிணறுகளை இறைப்பதற்கு 20 மில்லியன் ரூபா இழப்பீடாக நொதேர்ன் பவர் நிறுவனத் தால் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதி மக்கள் அதனை இழப்பீடாகப் பெற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டினர். இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டால் மீண்டும் நொதேர்ன் பவர் நிறுவனம் அங்கு செயற்படத் தொடங்கும் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டனர். இறுதியில் உதவித் தொகை என்று குறிப்பிட்டே அந்த மக்களுக்கு வழங்கினோம். அவர்களது கிணற்று நீரை பரிசோதிப்பதற்கு கட்டணம் செலுத்தி பரிசோதிக்க முடியும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

அந்த மக்கள் தமது கிணற்று நீரையே இப்போதும் அருந்துகின்றனர். நொதேர்ன் பவர் நிறுவனம் மீளச் செயற்படுமா என்பது தொடர்பில் உத்தரவாதம் கேட்கின்றனர் என்று உடுவில் பிரதேச செயலர் குறிப்பிட்டார்.இதன்போது கருத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த நிறுவனம் மீள இயங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், அதற்கு அனுமதிக்கவில்லை. ஒருபோதும் அவர்களுக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.



இந்திய- புதுடெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சியின் பயனாக மீளுருவாக்கம் செய்யப்பட்ட புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவில் பண்ணிசைப்பாராயணம் செய்து சைவசமயத்துக்குப் பெருமை சேர்த்த குமார வயலூர் திருமுறைக் கலாநிதி முனைவர் திருஞான சம்பந்த பாலசந்தர் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணா மலைப் பல்கலைக்கழகம்-சிதம்பரம்) ஹுணுப்பிட்டி ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வருடாபிஷேக நிகழ்வில் கலந்து பண்ணிசை பாடி விழாவை அலங்கரித்தார்.

# மினுவாங்கொடை நாலந்த கல்லூரியில் ஹார்பிக்கின் சுவஜன வேலைத்திட்டம்



இலங்கையின் முன்னணி சுகாதார வர்த்தக நாமமான Harpic (ஹார்பிக்), பெண்கள் பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவிகள் மத்தியில் கழிவறைகளில் சுகாதாரத் தரத்தை உயர்த்தி வருவதுடன் முறையான சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சுவ ஜன வேலைத்திட்டம் என்ற சமூகப் பொறுப்பு பிரசார நடவடிக்கையையும் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது நிகழ்ச்சி மினுவாங்கொடை நாலந்த பெண்கள் கல்லூரியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்றது.

கல்வி அமைச்சுடன் இணைந்து சுவ ஜன வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மேல் மாகாணம் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சி அமைந்தது. இதன் முதலாவது நிகழ்ச்சியானது 2023 ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம் திகதி அம்பத்தளை சமுத்திராதேவி பெண்கள் கல்லூரியில் சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து இடம்பெற்றது.

இந்த முயற்சி குறித்து கருத்துத் தெரிவித்த Reckitt Benckiser Lanka Ltd – Harpic வர்த்தக நாம முகாமையாளர் தேவிந்தி ஹேவபந்துல, பாடசாலை செல்லும் இளம் பெண் பிள்ளைகள் மத்தியில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முறையான சுகாதார நடைமுறைகளை ஊக்குவிப்பதில் எங்களின் அர்ப்பணிப்புக்கு இதுவொரு சான்று. கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுவதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவிகள் மத்தியில் கழிவறை சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், நல்ல சுகாதார பழக்கங்களை கடைப்பிடிக்க அவர்களை ஊக்குவிப்பதுமே எங்களின் இலக்காகும்.

எங்கள் கல்வித் திட்டங்கள் மற்றும் தொழில்முறை விரிவுரைகள் மூலம் சரியான சுகாதார நடைமுறைகளைப் பேணுவதற்கான அறிவு மற்றும் கருவிகளைக் கொண்டு இளம் பெண் பிள்ளைகளுக்கு அதிகாரமளிப்பதாகவும் நாங்கள் நம்புகிறோம் எனவும் தெரிவித்தார்.





கொழும்பு, கங்காராம விகாரையில் அமைந்துள்ள ஆதி சிவன் ஆலயத்தில் அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்ரூபன் யாத்திரைக் குழுவின் தலைவர் குருசாமி ஜெயமுருகன் வீரமூர்த்தி, தெமட்டகொடை ஆறாமய வீதி ஸ்ரீ செந்தில் குமரன், ஆலய அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர் திருமதி பா. கனகலிங்கம் தலைமையிலான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கடந்த சனிக்கிழமை விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

## புனித அந்தோனியார் ஆலய 189ஆவது வருடாந்த திருவிழா



புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை (3ஆம் திகதி) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் நவநாள் திருப்பலிகள் இடம்பெறும். எதிர்வரும் 12ஆம் திகதி மாலை ஆராதனையுடன் மறுநாள் 13ஆம் திகதி திருநாள் திருப்பலி பூசை நடைபெறும்.

அன்று அதிகாலை 4 மணிக்கு தமிழிலும், அதிகாலை 5 மணிக்கு சிங்களத்திலும், காலை 7 மணிக்கு தமிழிலும், 8 மணிக்கு சிங்களத்திலும், 10 மணிக்கு தமிழிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு ஆங்கிலத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்று ஆசீர்வாதத்துடன் வருடாந்த திருவிழா இனிதே நிறைவடையும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (01.06.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 183.5776 | 194.9105 |
| கனேடியன் டொலர் | 208.0752 | 220.4610 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3265 | 42.4434 |
| யூரோ | 302.2424 | 319.3626 |
| ஜப்பான் யென் | 2.0303 | 2.1407 |
| சிங்கப்பூர் டொலர் | 208.9777 | 221.1859 |
| ஸ்ரேலிங் பவுன் | 352.3039 | 370.9486 |
| சுவிஸ் பிராங்க் | 309.3864 | 329.0623 |
| ஐ.அ. டொலர் | 283.8763 | 297.2316 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 775.6931 |
| குவைட் | குவைட் தினார் | 950.7972 |
| ஓமான் | ஓமான் றியால் | 759.5857 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.2788 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.9716 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரப இராச்சிய திர்ஹம் | 79.6253 |

# தென்கிழக்கு பல்கலையில் வணிக செயல்முறை தொழில் கண்காட்சி








(மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கில் மிகப்பெரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை மாதிரியாக்க தொழில் கண்காட்சி 2023, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(31) நடைபெற்றது.

பல்கலைக்கழகத்துடன் இணைந்து SLASSCOM ஆல் நடத்தப்படும் இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு, நமது நாட்டில் உள்ள முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள திறமையாளர்களை ஒன்றிணைக்கும் வகையில் மிகப்பெரிய தொழில் கண்காட்சியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ.ரமீஸின் பிரதம அதிதி உரையுடனும் SLASSCOMஇன் தலைவர் ஆஷிக் அலியின் அறிமுக உரையுடனும் தொழில் கண்காட்சி ஆரம்பமானது.

இந்நிகழ்ச்சியை பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வின் அனுசரணையாளர்களாக IT மற்றும் BPM துறையின் வளர்ச்சியை ஆதரித்து, சக்தி வழங்கும் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

SimCentric Technologies, Axiata Digital Labs, HSenid Axcenze, HCL Tech, Topjobs, Dialog, LSEG, Abans மற்றும் நோர்வே தூதரகத்தின் ஆதரவு உட்பட பிற அனுசரணையாளர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை வழங்கிய நிறுவனங்களாக அமைந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

அவர்களின் அர்ப்பணிப்பு இந்த நிகழ்வை சாத்தியமாக்கியுள்ளதுடன் எண்ணற்ற வாய்ப்புகளுக்கான தளத்தை வழங்குகிறது. இது IT மற்றும் BPM துறையில் வேலைவாய்ப்புகளை பூரணப்படுத்துவதற்கான கதவுகளைத் திறக்கிறது. நிகழ்வின்போது பல்கலைக்கழக துணைவேந்தர் தனது உரையில் பல முக்கியமான விடயங்களை எடுத்துரைத்தார். கணினி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகம் சார்ந்த மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உட்பட இது போன்ற வாய்ப்பு இதற்கு முன் கிடைக்காதவர்களுக்கு இந்த தொழில் கண்காட்சி ஒரு குறிப்பிடத்தக்க தளமாக விளங்குகிறது. வரலாற்று ரீதியாக, இதே போன்ற நிகழ்வுகள் பெரும்பாலும் கொழும்பு போன்ற பெருநகரங்களில் தனிநபர்களுக்கு அணுகக்கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும், இந்த தொழில் கண்காட்சியானது கிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த தனிநபர்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் பல துறைகளில் வெவ்வேறு சாத்தியக்கூறுகளை ஆராய அவர்களுக்கு உதவுகிறது.

பல்கலைக்கழகமும் அதன் ஊழியர்களும் மற்றும் மாணவர்களை இங்கு கூடியிருந்த அனைத்து தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், பட்டதாரிகள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளுக்கு, தங்கள் திறமைகள் மற்றும் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கிறது.

இந்த தொழில் கண்காட்சி மாணவர்களை அவர்களின் கனவு வேலைவாய்ப்பை நோக்கி வழிநடத்தும் ஒரு ஊடகமாக செயல்படுகிறது. இது புதிய வாய்ப்புகளை சந்திக்கும் இடமாகும். மேலும், மாணவர்கள் தொழில்துறை தலைவர்களுடன் இணைவதற்கும் வளர்ச்சி மற்றும் வெற்றிகள் நிறைந்த எதிர்காலத்தை இயலுமையாக்குவதற்கும் அனுமதிக்கிறது.

இந்த நிகழ்வு முழுவதும், மாணவர்கள் பரந்த அளவிலான தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதனூடாக IT மற்றும் BPM தொழிற்றுறையின் சமீபத்திய போக்குகள், தொழில்நுட்பங்கள் மற்றும் வாழ்க்கை பாதைகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுகின்றனர்.

இந்த விலைமதிப்பற்ற தளத்தை இணைப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் தங்கள் திறனை வெளிப்படுத்துவதற்கும் அதிகம் பயன்படுத்துமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அத்துடன் மாணவர்களின் திறமைகள் பிரகாசிக்கவும் இவ் எண்ணற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்துமாறும் உபவேந்தர் கேட்டுக்கொண்டார்.

சமகாலத்தில் IT மற்றும் இயந்திர கற்றல் துறையில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. இந்த ஆய்வுகள் கூட செயற்கை நுண்ணறிவின் (AI) வளர்ச்சியில் மாணவர்களின் ஈடுபாட்டை முதன்மைப்படுத்துகின்றன. இதற்கேற்ப துணைவேந்தர் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடப்பிரிவைச் சேர்ந்த மாணவர்களையும் பங்கேற்குமாறு ஊக்குவித்தமை எடுத்துக்காட்டத்தக்கதாகும். இந்த தொழில் கண்காட்சி பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நடைமுறை வேலை உலகிற்கான வாய்ப்புகளைத் திறக்கும் என்று நம்பப்படுகிறது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கிழக்கில் விசேட குழு நியமனம்








(மட்டக்களப்பு, வெல்லாவெளி செய்தியாளர்)

தேசிய ரீதியில் கிழக்கு மாகாணம் டெங்கு தொடர்பில் முதலிடம் வகித்து வருவதனையிட்டு அதனை கட்டுப்படுத்துவதற்கான குழுவொன்றினை ஆளுநர் நியமித்ததுடன், மிக விரைவாக மாகாணத்தில் இருந்து டெங்கை இல்லாதொழிக்க அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டுமென அதிகாரிகளிடம் கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டின் மே மாதத்துக்கான அபிவிருத்தி குழுக் கூட்டம் வியாழக்கிழமை(01) மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரன் மற்றும் இரா.சாணக்கியன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

குறிப்பாக, இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டன. மேலும் இம்மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டன. அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர் உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை பணித்துள்ளார்.

குறித்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிக்குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

அத்தோடு, மாவட்டத்தின் மேய்ச்சல்தரை மற்றும் மகாவலி தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றுக்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றினை எதிர்வரும் 26ஆம் திகதி நிகழ்த்துவதாகவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உலக வங்கி பிரதிநிதிகள் திருமலைக்கு விஜயம்



(அப்துல்சலாம் யாசீம்)

உலக வங்கியின் நிதி உதவியுடன் திருகோணமலை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்டு வரும் குளங்களை பார்வையிடுவதற்காக உலக வங்கியின் பிரதிநிதிகள் வியாழக்கிழமை(01) திருகோணமலைக்கு விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளனர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ - கோமரங்கடவல மற்றும் பதவிசிறிபுர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருவதாக திட்டத்தின் பிரதி திட்டப் பணிப்பாளர் டொக்டர் ஆரியதாச தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலையில் 29 குளங்களும் மட்டக்களப்பில் 24 குளங்களும் அம்பாறையில் 20 குளங்களும் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் நீர் முகாமைத்துவத்துக்கான விவசாயக் குழு, குறித்த அபிவிருத்தித் திட்டங்களை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளதுடன் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு மானிய அடிப்படையிலான மோட்டார் பம்ப் மற்றும் விதைகள், விவசாயத்துக்கான பாதுகாப்பு வளைகள், விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இத்திட்டத்தின் ஊடாக விவசாயிகளான எமக்கு இரண்டு தடவைகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட முடியும் எனவும் இப்புனரமைப்புத் திட்டம் ஊடாக விவசாயிகள் பலர் நன்மைகளை பெறுவதாகவும் அக்கிராம விவசாயிகள் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

இத்திட்டங்களை பார்வையிடுவதற்காக உலக வங்கியின் பிரதிநிதிகளான சேவ் சலாவ் (SHEU SALAU), உலக வங்கியின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.மனோகரன், சியாப் திட்டத்தின் பொறியியலாளர் பண்டார ராஜ கருணா மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ நிபுணர் ஜீ.சுஜீதரன், மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரிகள், அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



**சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி வங்கி பிரிவின் ஏற்பாட்டில் புகைத்தலுக்கு எதிரான வாசகம் அடங்கிய கொடி விற்பனை செய்யும் நிகழ்வு புதன்கிழமை(31) இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட குறித்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)**




**நாட்டில் எரிபொருள் விலையில் ஏற்பட்ட மாற்றங்களினால், நேற்று வியாழக்கிழமை சாய்ந்தமருது பிரதேசத்தில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து, பொதுமக்கள் எரிபொருளைப் பெறுவதற்காக வரிசையில் நிற்பதை காணலாம். (பொலிவேரியன் செய்தியாளர்)**



**பாலமுனை மக்களின் நீண்டநாள் தேவையான மக்கள் வங்கி ஏரிஎம் இயந்திரம் ஒன்றினை திறப்பதற்கான கோரிக்கை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியிடம் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் முன்வைக்கப்பட்டது. இதற்கமைய, வியாழக்கிழமை(01) அதற்கான அனுமதியினை அமைச்சரால் வழங்கப்பட்டது. (திகாமடுல்ல செய்தியாளர்)**



**உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மரம் நடுகை நிகழ்வு சாய்ந்தமருது கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது. சாய்ந்தமருது கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.எம்.றிசாட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மரங்களை நட்டி வைத்தார். இதன்போது சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (பொலிவேரியன் செய்தியாளர்)**

# ஓய்வுபெற்றுச் செல்லும் தாதிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பணியாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் தாதிய உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(30) இடம்பெற்றது.

எம்.ஏ.ஆப்தீன், ஜரினா சாதிக் மற்றும் சுகாதார உதவியாளர்களான ஜி.குணசுந்தரி, எம்.சி.நபிலா உம்மா ஆகியோரை பாராட்டிக் கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு நலன்புரிச்சங்கத் தலைவர் டாக்டர் ஏ.ஜி.எம்.ஷபீ தலைமையில் வைத்தியசாலையில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் கலந்து கொண்டு ஞாபகச்சின்னம், பணப்பரிசு என்பவற்றை வழங்கிவைத்ததுடன், நலன்புரி சங்க செயலாளரும் விடுதி மேற்பார்வையாளருமான ஏ.சீ.நக்கீப், பொருளாளர் எஸ்.பர்னாஸ் மற்றும் நிறைவேற்று குழு உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# யாழ். இந்திய துணைத்தூதுவருடன் திருமலை நீச்சல் சிறார்கள் சந்திப்பு



(கிண்ணியா செய்தியாளர்)

கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளினால் ஏற்படும் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் சிறார்களாகிய நாங்கள் 'பாக்கு நீரிணையை 32கிலோ மீற்றர் தூரத்தினை நீந்திக் கடந்து சாதனை படைத்தல்' என்ற தொனிப்பொருளில் வை.ஏ.என்.ஏ. நீச்சல் பாடசாலையில் பயிற்சி பெற்றுவரும் 15 வயதுக்கு கீழ் உள்ள திருகோணமலையைச் சேர்ந்த சிறார்கள் மேற்படி விடயம் தொடர்பில் முதல் கட்டமாக இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் சந்திக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(30) யாழில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கடல் மற்றும் கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு, பிளாஸ்டிக் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு, செயல் திட்டங்களை வட கிழக்கில் எதிர்வரும் காலங்களில் செயற்படுத்துவது தொடர்பான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் இளம் சிறார்களின் இம்முயற்சியினைப் பாராட்டிய துணைத்துதுவர், உயர்ஸ்தானிகராலயத்தினூடாக ஆயத்தங்களை மேற்கொண்டு தனது முழுமையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

இதேவேளை, இந்தியத்தூதரக உயர்ஸ்தானிகரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் தொடர்பு ஒழுங்குகளையும் திருகோணமலை Trinco Aid நிறுவனம் செய்ததுடன் இச்சந்திப்பில் Trinco Aid இன் நிறுவனர், பணிப்பாளர், நிகழ்ச்சி முகாமையாளர் ஆகியோரும் YANA Swimming School இன் பணிப்பாளர் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆயுர்வேத வைத்திய நியமனத்தில் யூனானி வைத்தியர்கள் புறக்கணிப்பு

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் ஜனாதிபதி ரணிலிடம் எடுத்துரைப்பு



ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும்போது ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களையும் உள்ளடக்கியதாகவே நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆயுர்வேத வைத்திய நியமனத்தில் யூனானி வைத்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை குறித்து அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆயுர்வேத வைத்திய நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனைத் தொடர்புகொண்டு கவலை தெரிவித்ததையடுத்தே அவர் ஜனாதிபதிக்கு இவ்விடயம் தொடர்பில் அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும்போது ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களை உள்ளடக்கியதாக நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் வழங்குவதானது யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனங்களின் போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யூனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இம்முறை வழங்கப்படவுள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில் யூனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமையானது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதுடன், யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவுமே இதனைக் கருதுகிறேன்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில் யூனானி வைத்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கவனஞ்செலுத்தி பாதிக்கப்பட்டுள்ள யூனானி வைத்தியர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர்களையும் இணைத்துக்கொள்வதற்கு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதியின் செயலாளரை தொலைபேசியில் தொடர்புகொண்டு யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதி தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தையிட்டி சட்டவிரோத விகாரை விவகாரம்; இன்னும் தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை

தையிட்டியில் சட்டவிரோதமாக இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டபோதும் எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம்(31) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தையிட்டி விகாரை தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் காணி எப்போது விடுவிக்கப்படும் எனவும் கேள்வி எழுப்பினார்.

விகாரைக்குரிய காணியிலேயே கட்டப்பட்டுள்ளதாக முதலில் கருதியதாகவும் பின்னரே அது தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ளமை தெரியவந்ததாகவும் அது தவறு என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சுட்டிக்காட்டினார். பாராளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியபோதும் அவர் அதனைச் செவிமடுத்தாரே தவிர அதற்கான தீர்வை வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

கட்டப்பட்ட விகாரையை அகற்ற முடியாது. அந்த மக்களுக்கு வேறு காணிகளை வழங்கலாம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு சுட்டிக்காட்டினார். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டவிரோத கட்டடத்தை எப்படி அனுமதிக்கலாம் என்று கேள்வி எழுப்பினர்.

இந்த விகாரைக்கான அடிக்கல் நடப்பட்ட மறுநாளே தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சட்டவிரோத விகாரை கட்டுமானத்தை நிறுத்தவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே தீர்மானம் பின்னர் யாழ். மாவட்ட செயலகத்திலும் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதென்று மீண்டும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரினர்.

யாழ். மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அத்தைகயதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்பதை ஆராய்ந்தே அவ்வாறானதொரு தீர்மானத்தை மீள நிறைவேற்றமுடியும். இப்போது, அந்த விகாரைக்கு ஆட்சேபம் தெரிவிப்பதாக கருத்தைப் பதிவு செய்யலாம் என்றும் குறிப்பிட்டார்.

# கச்சாய் கடல் பிரதேசத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-சங்குப்பிட்டி பாலத்துக்கும் கச்சாய் பிரதேசத்துக்குமிடைப்பட்ட கடல் பரப்பில் நேற்றுமுன்தினம்(31) புதன்கிழமை பிற்பகல் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர் .

மேற்குறித்த கடல் பரப்பில் சடலமொன்று கரையொதுங்கியிருந்ததை அவதானித்த மீனவர்கள் இது தொடர்பாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில், ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலம் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்து கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேஷிய தூதுவர் - மத்திய மாகாண ஆளுநர் சந்திப்பு



(கண்டி செய்தியாளர்)

இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவருக்கும் மத்திய மாகாண ஆளுநருக்குமிடையே கண்டியில் சிநேகபூர்வ சந்திப்பொன்று நேற்று (01) இடம்பெற்றது. இதன்போது ஏழு கன்னிமலை விமான விபத்தின் 50 ஆவது வருட நிறைவை நினைவு கூருவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இந்தோனேஷிய தூதுவர் தேவி குஸ்டினா டோபிங் கண்டிக்கு விஜயம் செய்த போது மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவை கண்டியிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

கல்வி, கலாசார, சுற்றுலா தொடர்பான பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக, 1974ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஹஜ் பயணிகளை ஏற்றிச்சென்ற இந்தோனேஷிய விமானம் ஒன்று ஏழு கன்னி மலையில் மோதி விபத்துக்குள்ளாகி 49 வருடங்கள் ஆகின்றன. இதனையடுத்து 2024 ஆம் ஆண்டில் 50 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்தோனேஷிய பிரஜைகளில் அதிகமானோர் அவ்விடத்துக்கு செல்லவுள்ளதாகவும் அதற்கான வசதிகளை வழங்குவது தொடர்பாகவும் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

# சாவகச்சேரி நீதிமன்றத் தீர்ப்பை கேள்விக்குட்படுத்திய விவகாரம்

## வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நீதிமன்றத் தீர்ப்பை கேள்விக்குட்படுத்தியதாக மக்கள் பிரதிநிதிகள் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணையை ஓகஸ்ட் 24ஆம் திகதி வரை சாவகச்சேரி நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட தாவளை-இயற்றாலை - ஊரெல்லை வீதி மீள் திறப்பு விவகாரத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர், சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன், சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் திலகராணி ஆகியோருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்நிலையில், இதுதொடர்பான வழக்கு விசாரணை நேற்று (01) வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதிவரை வழக்கு விசாரணையை சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஒத்திவைத்தார்.

தாவளை- இயற்றாலை - ஊரெல்லை வீதி மற்றும் அதனோடு இணைந்த குளம் ஒன்றின் பாகம் ஆகியவற்றை தனியார் ஒருவர் அடாத்தாக தனது காணியுடன் சேர்த்து அடைத்து வைத்திருப்பதாகத் தெரிவித்து கிராம மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கடந்த மாத நடுப்பகுதியில் சாவகச்சேரிப் பிரதேச சபையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியிருந்த நிலையில், பிரதேச சபை மற்றும் கொடிகாமம் பொலிஸார் இணைந்து தமது ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி வீதி மற்றும் குளத்தின் பாகம் ஆகியவற்றை மீட்டு அதனை பொதுமக்களின் பாவனைக்கு வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தந்தை செல்வா நினைவு தினம்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வா நினைவு தினம் எதிர்வரும் 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஜிந்துப்பிட்டி நீதிராஜா மண்டபத்தில் மன்றத் தலைவர் லயன் எஸ். ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், சிறப்பு விருந்தினராக சென் அந்தனிஸ் கல்லூரி அதிபர் இமானுவேல், கௌரவ விருந்தினர்களாக தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இராஜேந்திரன் தக்ஷாயினி, சைவ மங்கையர் கழக அதிபர் அருந்ததி இராஜவிஜயன், விவேகானந்தா தேசிய பாடசாலை அதிபர் ரி.தேவசியானி, இராமகிருஷ்ணா பாடசாலை அதிபர் எஸ்.ராஜமாலினி, புளுமெண்டல் பெண்கள் கல்லூரி அதிபர் ஏ.ஜே.நிர்மலா, சென் அந்தனிஸ் பிரதி அதிபர் மைதிலி உதய சந்திரன், கிறீன் லேன் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஏ.எஸ்.எம். சப்ரீன், கொழும்பு கலைமகள் வித்தியாலய அதிபர் எம். முருகானந்தன், அம்பேகமுவ இந்து கலாசார உறுப்பினர் வி.கல்பனா, கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.சிவரஞ்சன், கதிரேசன் அன்டன் விக்னேஸ்வரன், ஆசிரியர் ஆ.செல்வராஜ், அதிபர் எஸ்.பி.மைக்கல், சட்டத்தரணி பஞ்சாட்சரம், பான் ஏசியா வங்கி முகாமையாளர் அந்தனி எட்வேட் கவின், சக்தி எவ்.எம். நிகழ்ச்சி முகாமையாளர் கணாதீபன், என்டிபி வங்கி முகாமையாளர் பாலசுப்பிரமணியம் ஐங்கர , சமூக சேவையாளர் எஸ்.எம்.செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமரத்துவமடைந்த கிராம உத்தியோகஸ்தர் உருத்திரன் ஞாபகார்த்தமாக தந்தை செல்வா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்படவுள்ளதுடன் தந்தை செல்வா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

தந்தை செல்வா நினைவு தின ஏற்பாடுகளை மன்றத்தின் பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், சமய துறைப்பொறுப்பாளர் ஜே.ஹருணந்தி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த இரத்தினக்கல் வர்த்தகர்கள்



இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள், தொழில் முயற்சியாளர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை 30ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறை தொடர்பாக நிலவும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு மாணிக்கக்கல் தொழில் சார்ந்து ஈடுபட்டுள்ள வர்த்தகர்களின் தற்போதைய நிலைகுறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை எளிதில் பெறக்கூடிய மாணிக்கக்கல் மற்றும் ஆபரணத்துறையில் நிலவிவரும் அதிகாரிகள் வாதம் முதலில் இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையானது, வர்த்தக ஊக்குவிப்பாளராகவும் சேவை நலன் வழங்குபவராகவும் புனரமைக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# இலங்கை, சீனாவின் 12ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைக் கூட்டம்

## இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் ஆராய்வு







இலங்கை மற்றும் சீனாவின் 12ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைக் கூட்டம் மே 30ஆம் திகதி இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சில் குறித்த அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் சீன மக்கள் குடியரசின் வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வெய்டாங் ஆகியோரின் இணைத் தலைமையில் மேற்படி கூட்டம் இடம்பெற்றது.

இருதரப்பு ஒத்துழைப்பு, பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு, தற்போதைய பொருளாதார மீட்பு செயல்முறை, வாழ்வாதார உதவி மற்றும் நிதியுதவி உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களில் சீனாவின் உயர்மட்ட வளர்ச்சி, சீனாவின் நவீனமயமாக்கல் மற்றும் மில்லியன் கணக்கான சீன குடிமக்களை வறுமையிலிருந்து வெற்றிகரமாக மீட்டெடுத்தமை என்பன குறித்து இதன்போது சீனாவின் துணை அமைச்சர் விபரித்தார்.

சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு சீனா அளித்த உதவியைப் பாராட்டிய வெளியுறவுச் செயலர் அருணி விஜேவர்தன, இலங்கையின் ஏற்றுமதியை சீனாவுக்கு விரிவுபடுத்துவதற்கும் அதாவது, கடலுணவு, பழங்கள், காய்கறிகள் மற்றும் இரத்தினக்கல் ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கு சீனாவின் ஆதரவைக் கோரினார். மேலும் அவர் இலங்கையின் பொருளாதார மீட்சியை விளக்கியதுடன் சீன சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதை வரவேற்றார். இரு நாட்டு மக்களின் பரஸ்பர நன்மைக்காக இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இலங்கையும் சீனாவும் இதன்போது உறுதியளித்தன.

இக்கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி அனுசரணையில்
## 300 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிப்பு






வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி கடந்த காலங்களில் முன்னெடுத்த சமூக நலப் பணிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் வெள்ளவத்தை பகுதியில் குறைந்த வருமானம் பெறுகின்ற 300 குடும்பங்களுக்கு உலருணவுப்பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் திட்டமொன்றை அண்மையில் செயற்படுத்தியுள்ளது.

வெள்ளவத்தை பொலிஸ் நிலையம், கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகம் மற்றும் LIC Lanka Limited ஆகியவற்றின் பூரண ஒத்துழைப்புடன் செயற்படுத்திய இத்திட்டத்தின் மூலம் உலருணவுப் பொருட்களைப் பெறுவதற்குத் தகுதியான ஆட்களைத் தெரிவுசெய்வதற்கு வெள்ளவத்தை பொலிஸ் நிலையம் மற்றும் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் உறுதுணையாக இருந்தனர்.

உலருணவுப்பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தில் கலந்துகொண்டு பேசிய வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜெயராஜா, சகலரும் தம்மால் முடிந்தவரை சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டுமெனக் குறிப்பிட்டார். ஒருவருக்கொருவர் உதவுதல், ஒத்துழைப்பு நல்குதல், கடினமான சந்தர்ப்பங்களில் உதவுதல் ஆகிய பண்புகள் மனித உறவுகள் மேம்படுவதற்கும் சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவாக இருக்குமென ஜெயராஜா மேலும் தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தமக்கு கிடைத்த இந்த அன்பளிப்புகளை மேலும் சிலருடன் பகிர்ந்தளிக்க முடியுமாக இருந்தால் அது சிறந்த முன்னுதாரணமாக இருக்குமெனக் குறிப்பிட்டார்.

வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி வளாகத்தில் நடைபெற்ற மேற்படி உலருணவுப் பொருள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் நித்தியகல்யாணி ஜுவலரி பணியாளர்கள், கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர் சயிபுதீன், LIC Lanka Limited நிறுவனத்தைச் சேர்ந்த ரஜினிகாந்த் உள்ளிட்ட விருந்தினர்கள் பலரும் உள்ளூர்வாசிகளும் கலந்துகொண்டனர். நித்தியகல்யாணி ஜுவலரி நிறுவனத்தினால் வருடாந்தம் இவ்வாறான பல்வேறு சமூகநலத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதோடு, உலருணவுப் பொருள் விநியோகம், கடற்கரைப் பகுதிகளை சுத்தப்படுத்தல், மரம் நடுதல் – பராமரித்தல் மற்றும் இரத்ததான நிகழ்வு ஆகிய திட்டங்கள் அவற்றில் அடங்குகின்றன.

## 50,000 பயணிகளுடன் புதிய உயரங்களை எட்டும் FitsAir




இலங்கையின் முதலாவது தனியாருக்குச் சொந்தமான சர்வதேச விமான சேவையான FitsAir, கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் தனது செயற்பாடுகளை ஆரம்பித்ததிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் அவ்விமான நிலையத்தை நோக்கியும் 50,000 இற்கும் அதிகமான பயணிகளுக்கு சேவை வழங்கியதன் மூலம் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளதாக அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்தச் சாதனையானது விமானத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அதிலும் குறிப்பாக, மூன்று இடங்களுக்கு மாத்திரமே FitsAir சேவைகளை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அனைவருக்கும் கட்டுப்படியான விலையில் மற்றும் வசதியான விமானப் பயணத் தெரிவுகளை வழங்கும் நோக்கத்துடன் FitsAir தனது சர்வதேச பயண சேவைகளை 2022 ஒக்டோபர் மாதம் ஆரம்பித்தது. அப்போதிருந்து அதன் சேவைகளுக்கான தேவையை கணிசமான அதிகரிப்பை இவ்விமான நிறுவனம் முகம் கொடுத்து வருகின்றது. குறிப்பாக, அதன் கட்டுப்படியான விலை மற்றும் வசதியின் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

Fits Aviation (Pvt) Ltd நிறுவனத்தின் பணிப்பாளர் அம்மார் காசிம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதுடன், எமது பயணிகளிடமிருந்து பல்வேறு சாதகமான விமர்சனங்களையும பெற்றதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மைல்கல்லானது, எமது பயணிகளுக்கு பாதுகாப்பான, சௌகரியமான மற்றும் வசதியான விமானப் பயணத்தை வழங்குவதில் எமது குழுவினர் கொண்டுள்ள கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்” என்றார்.

அம்மார் மேலும் கருத்து வெளியிடுகையில், “எம்முடன் இணைந்து பறப்பதற்காக எம்மை எம்மைத் தெரிவுசெய்தமைக்கும் தங்களது பயணத் தேவைகளுக்காக எம்மில் வைத்த நம்பிக்கைக்கும் நாம் எமது மனமார்ந்த நன்றியை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். 50,000 பயணிகளுக்கு சேவை வழங்கியமை தொடர்பில் நாம் பெருமை கொள்கிறோம் என்பதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற பயண அனுபவத்தைத் தொடர்ந்தும் வழங்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.” என்றார்.

இந்தக் குறிப்பிடும்படியான சாதனையைக் கொண்டாடும் வகையில், FitsAir தனது 50,000 ஆவது பயணிக்கு ஓர் இலவச விமான பயணச்சீட்டை வழங்கியது.

நடைமுறை ரீதியான பயண அனுபவத்தை வழங்குவதில் விமான நிறுவனம் கொண்டுள்ள கவனத்துடனும் போட்டித் தன்மை கொண்ட விலையுடனும் இப்பிராந்தியத்தில் உள்ள ஒரு முன்னணி குறைந்த–கட்டண சேவை வழங்குனராக FitsAir சேவை தன்னை நிலைநிறுத்துகிறது. இதன் மூலம் அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் விமானப் பயணத்தை அணுக வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இவ்விமான சேவையின் வெற்றியானது, சிறந்து விளங்குவதற்கான தனது அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்றாகும் என்பதுடன், அது எதிர்காலத்தில் வளர்ச்சியுடனும் வெற்றியுடனும் தொடர்ச்சியாக பயணிக்க எதிர்பார்க்கிறது.

விமானப் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்ய அல்லது மேலதிக தகவலுக்கு, வாடிக்கையாளர்கள் FitsAir இணையதளத்தை www.fitsair.com அணுகலாம். (+94) 117 940 940 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது WhatsApp (+94) 777 811 118 இலக்கம் ஊடாக, வாடிக்கையாளர் சேவை நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்.

## Selenia Dimens mammography அமைப்புடன் நவீன மார்பகப் புற்றுநோயை கண்டறியும் தொழில்நுட்பத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் Hemas





இலங்கையிலுள்ள பெண்களிடையே மார்பகப் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு பிரதிபலிக்கும் வகையில், இலங்கையின் முன்னணி தனியார் மருத்துவமனை சேவை வலையமைப்பான ஹேமாஸ் மருத்துவமனை குழுமம், அண்மையில் இலங்கைக்கு Selenia Dimensions mammography தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது.

இதன்மூலம் இலங்கையிலுள்ள பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் நிலைமைகளை மிகத் துல்லியமாக முன்கூட்டியே கண்டறிய முடியுமென்பதுடன் மார்பகப் புற்றுநோயிலிருந்து முழுமையாக விடுபடுவதற்கு அல்லது அதனை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கும் இது வாய்ப்பளிக்கும்.

மனித மரணத்திற்கு புற்றுநோய் முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது மற்றும் தரவுகளின்படி, மார்பகப் புற்றுநோயானது பெண்களிடையே மிகவும் பொதுவான வகை புற்றுநோயாகும். உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப்படி, 2020 இல் இலங்கையில் பதிவான மொத்த புற்றுநோயாளிகளில் 13.4% பேர் மார்பகப் புற்றுநோயாளிகள். கர்ப்பப்பை, வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களிலும் 25.7% பேர் மார்பக புற்றுநோயாளிகள் மற்றும் 2020இல் மொத்த மார்பகப் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 3,975 ஆகவே இருந்தது. இலங்கையில் அத்தியாவசிய வசதிகள் இல்லாமை மற்றும் மார்பகப் புற்றுநோய் பற்றிய அறியாமை காரணமாக நாட்டில் மார்பகப் புற்றுநோயாளிகளின் இறப்பு விகிதம் 42.5% ஆக உயர்ந்துள்ளது.

உலகளவில், 2020 ஆம் ஆண்டில் 2.26 மில்லியனுக்கும் அதிகமான மார்பகப் புற்றுநோய்கள் பதிவாகியுள்ளன, இது உலகளவில் பதிவான அனைத்து புற்றுநோய்களில் 12.5% ஆகும். மார்பகப் புற்றுநோயானது பெண்களில் மிகவும் பொதுவான புற்றுநோயாகும். இது ஒட்டுமொத்தமாக மிகவும் பொதுவான புற்றுநோயாக இருக்கலாம்.

மேலும், உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவுகளின்படி, மார்பகப் புற்றுநோயால் 30.3% இறப்பு விகிதம் உள்ளதுடன் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் ஆபத்து, இது பெண்களிடையே பதிவாகும் அனைத்து புற்றுநோய்களிலும் 25.8% ஆகும்.

பெரும்பாலான வளர்ந்த நாடுகளில், மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பது மேம்பட்ட நிலையில் உள்ளது. நாட்டில் மார்பகப் புற்றுநோயின் வளர்ச்சியைக் காட்டும் இலங்கையில் நோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான தொழில்நுட்பம் போதுமானதாக இல்லாததால் சுகாதாரத்துறை ஒரு சவாலை எதிர்கொண்டுள்ளது.

தனது தேசிய பொறுப்பை அங்கீகரித்துள்ள தனியார் துறை மருத்துவமனை குழுவாக, வத்தளை ஹேமாஸ் மருத்துவமனை சாதகமான தீர்வை வழங்குவதன் மூலம் 2023 மார்ச் 23 அன்று தனது சமீபத்திய மேமோகிராம் முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இது மார்பகப் புற்றுநோயின் அபாயத்தைக் குறைப்பதில் தேசிய பங்களிப்பைச் செய்ய அவர்களுக்கு உதவியது. ஹேமாஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான திருமதி கஸ்தூரி செல்வராஜா வில்சன் தலைமையில் இந்த சமீபத்திய மேமோகிராம் இயந்திரத்தின் நோய் கண்டறிதல் சிகிச்சை முறை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய ஹேமாஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான திருமதி கஸ்தூரி செல்வராஜா வில்சன், ஹேமாஸ் மருத்துவமனை குழுமத்திற்கு ஆர்.என்.ஏ. 3டி தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த நவீன மேமோகிராம் இயந்திரத்தை அறிமுகம் செய்திருப்பது நிச்சயமாக மற்றொரு அழியாத மைல்கல் என்று சொல்லலாம். பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான ஹேமாஸ் மருத்துவமனை குழுமத்தின் முயற்சிகள். இந்த இயந்திரத்தின் மாதிரிகளை பரிசோதிக்கும் திறனின் காரணமாக, மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே சிகிச்சையை ஆரம்பிக்க முடியும். எனவே, உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளித்து, சரியான நேரத்தில் மேமோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம், மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, ஆரம்ப நிலையிலேயே சிகிச்சையைத் தொடங்கி, இந்நிலையிலிருந்து முற்றிலும் விடுபட, ஒட்டுமொத்த பெண் சமூகத்தையும் கேட்டுக்கொள்கிறோம்.” – எனத் தெரிவித்தார்.

## Cinec Campus இன் பல்வேறு புதிய பாடநெறிகளுடன் Cinec சர்வதேச ஹோட்டல் பாடசாலை அறிமுகம்

இலங்கையின் முதன்மையானதும் விசாலமானதுமான சமுத்திர பொறியியல் கற்கை நிறுவனமான Cinec Campus அதன் சர்வதேச ஹோட்டல் பாடசாலையை (Cinec–HIS) அறிமுகப்படுத்தியுள்ளது. Cinec சர்வதேச ஹோட்டல் பாடசாலை அவுஸ்திரேலியாவின் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான தனித்துவமானதும் பழமையானதுமான பல்கலைக்கழகமான Modul University உடன் இணைந்து விருந்தோம்பல் தொடர்பான சான்றிதழ் பாடநெறியை அறிமுகப்படுத்தியுள்ளது. தொழில்முறை சமையல் (Professional Cookery), பேஸ்ரி மற்றும் பேக்கரி (Pastry and Bakery), உணவகச் சேவை (Food and Beverage), விருந்தினர் வரவேற்பு (Hotel Front Office), ஹோட்டல் பராமரிப்பு (Hotel Housekeeping) ஆகிய மேற்படி பாடநெறிகள் தேசிய தொழிற்பயிற்சித் தகைமைக்கு (NVQ) ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாடநெறிகளின் தனித்துவத்தன்மை யாதெனில், சமுத்திரச் சுற்றுலா சேவைக்கு (Cruise Tourism) தேவையான அடிப்படைப் பயிற்சி இப்பாடநெறிகள் ஊடாக சிறப்புப் பயிற்சியாக வழங்குவதாகும். மேற்படி பாடநெறிகள் ஓராண்டு கால பாடநெறிகளாக செயற்படுத்தப்படுவதோடு அது ஆறு மாத கால கோட்பாட்டு மற்றும் செய்முறை (Theoretical and Practical) பயிற்சியை தொடர்ந்து ஆறு மாத கால கைத்தொழில்துறை சார்(Industrial Training) பயிற்சி காலப்பகுதியுடன் கூடியது.



தொழில்முறை சமையல் மற்றும் பேஸ்ரி மற்றும் பேக்கரி ஆகிய பாடநெறிகளை Cinec Campus இற்கு சொந்தமான கல்பிட்டிய ருவல ஹோட்டலுடன் இணைந்ததான ஹோட்டல் பாடசாலையில் (Hotel School within a Hotel) தங்கியிருந்து கற்க முடிவதோடு ருவல ஹோட்டலில் செய்முறை மற்றும் தொழில்முறை பயிற்சி முதல் ஆறு மாதங்களில் வழங்கப்படுவதே Cinec சர்வதேச ஹோட்டலில் இம்மாணவர்களுக்கு வழங்கப்படும் தனித்துவமான வாய்ப்பாகும். உணவகச் சேவை, விருந்தினர் வரவேற்பு, ஹோட்டல் பராமரிப்பு ஆகிய பாடநெறிகள் மாலம்பேயில் அமைந்துள்ள Cinec Campus இற்கு சொந்தமான ஹோட்டல் பாடசாலையில் நடைபெறுவதோடு இம்மாணவர்களுக்கும் ருவல ஹோட்டலில் செய்முறை மற்றும் தொழில்முறை பயிற்சி முதல் ஆறு மாதங்களில் உகந்ததான முறையில் வழங்கப்படும். மேலும், இம்மாணவர்களுக்கும் ஆறு மாத கைத்தொழில்துறை சார்ந்த பயிற்சி வழங்கப்படும். அதற்கும் மேலதிகமாக சுற்றுலா விருந்தோம்பல் துறையில் மனித வள தேவைகளை இலக்காகக் கொண்டு பல்வேறு குறுகிய கால பயிற்சி பாடநெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## மேம்படுத்தப்பட்ட ஷொப்பிங் அனுபவத்தை வழங்க புதுப்பிக்கப்பட்ட பண்டாரவளை FASHION BUG










இலங்கையின் புகழ்பெற்ற பேஷன் விற்பனையாளரான Fashion Bug மலையக நகரமான பண்டாரவளையில் அமைந்துள்ள அதன் நாடளாவிய வலையமைப்பின் முதல் விற்பனை நிலையத்தைச் சீரமைத்து புதுப்பித்துள்ளது. பரந்தளவிலான வாடிக்கையாளர்களைத் திறம்படச் சென்றடையவும் பண்டாரவளைக்கருகில் வசிக்கும் தனிநபர்களுக்கான ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இல. 136, தர்மவிஜய மாவத்தை, பண்டாரவளையில் அமைந்துள்ள விற்பனை நிலையம் 2023 மார்ச் 25 அன்று வைபவ ரீதியாக பொதுமக்களுக்கெனத் திறந்துவைக்கப்பட்டது.

இவ்விற்பனை நிலையம் பிரதம அதிதி முதன்மைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவால் ஆணையாளர் தனராஜ் கஜேந்திர குமார, பொலிஸ் அத்தியட்சகர், DMM தசநாயக்க, பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் DM நிஷாந்த குமாரசிறி, இலங்கை நடிகரும் பாடகருமான ரவீன் கனிஷ்க, பிரபல விருந்தினர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் முன்னிலையில் திறந்துவைக்கப்பட்டது.

சீரமைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட விற்பனை நிலையமானது வாடிக்கையாளர்களுக்கு விரிவான மற்றும் அதிநவீன ஷொப்பிங் அனுபவத்தை வழங்கக்கூடிய நவீன வசதிகள் மற்றும் அனுபவம் வாய்ந்த மற்றும் அறிவுள்ள நிபுணர்களின் குழுவைக் கொண்டுள்ளது.

Fashion Bug, இலங்கை நுகர்வோருக்கு நிகரற்ற நாகரிக மற்றும் வாழ்க்கை முறை அனுபவங்களை உருவாக்கி சர்வதேச வர்த்தக நாமங்கள் மற்றும் உலகளாவிய பாணிகளை நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் அதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட வர்த்தக நாமங்களை காட்சிப்படுத்துகின்ற இலங்கை பேஷன் சில்லறை வணிகம் என்பதில் பெருமிதம் கொள்கிறது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilanbusiness@gmail.com

# 'People's Remittance கோடி அதிர்ஷ்டம்' ஆண்டிறுதி மாபெரும் சீட்டிழுப்பின் முதல் வெற்றியாளருக்கு ரூபா 10 மில்லியன்

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான மக்கள் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'People's Remittance கோடி அதிர்ஷ்டம்' மாபெரும் சீட்டிழுப்பின் முதல் பரிசு ரூபா 10 மில்லியனை வென்ற மாபெரும் வெற்றியாளர் சுரஞ்சன பெரேராவுக்கு பெருமையுடன் வழங்கியுள்ளது. இச்சீட்டிழுப்பின் மாபெரும் பரிசளிப்பு நிகழ்வு கொழும்பு 2 இல் உள்ள மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) ரொஹான் பத்திரகே ஆகியோரால் சுரஞ்சன பெரேராவுக்கு மாபெரும் பரிசு வழங்கப்பட்டது. இந்த வெகுமதியின் அதிர்ஷ்டசாலி வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு தனது நன்றியையும் - மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்.




இந்நிகழ்வில் உதவிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) திருமதி அருணி லியனகுணவர்தன, சந்தைப்படுத்தல் தலைவர் நாலக விஜயவர்தன மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) திருமதி திலினி பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

'People's Remittance கோடி அதிர்ஷ்டம்' சீட்டிழுப்பானது வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு பணம் அனுப்பும் சேவைகளில் பங்கேற்கும் வங்கியின் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது. இந்த மாபெரும் பரிசை வழங்குவதன் மூலம், மக்கள் வங்கியானது தனது தலைசிறந்த வங்கிச்சேவை அனுபவங்களை வழங்குவதற்காக அதன் ஓயாத அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

'People's Remittance கோடி அதிர்ஷ்டம்' சீட்டிழுப்பு தற்போது மேலும் அதிக பரிசுகளுடன் 2023 டிசம்பர் வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஈடிணையற்ற வங்கிச்சேவைகளை வழங்குவதில் வங்கியின் அர்ப்பணிப்பு வெளிப்படுவதுடன் தனது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கு வெகுமதி அளிக்கும் எண்ணத்தையும் ஊக்குவிக்கிறது.

# SLT-MOBITEL'இன் mCash க்கு Asian Fintech Academy விருதுகள் வழங்கலில் மிகச்சிறந்த புத்தாக்க டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்காக கௌரவிக்கப்பட்டுள்ளது

22 மே 2023, கொழும்பு: இலங்கையின் மொபைல் நிதிச்சேவைகளை மாற்றியமைக்கும் முயற்சிகளைக் கௌரவிக்கும் வகையில், SLT-MOBITEL இன் mCash சேவைக்கு பெருமைக்குரிய இலங்கையின் மிகச்சிறந்த புத்தாக்க டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆசிய Fintech கல்வியகத்தினால் (AFTA) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் இந்த உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. வியாபாரங்கள் மற்றும் விற்பனைகள் துறைக்கு நவீன டிஜிட்டல் கொடுப்பனவுகள் தீர்வுகளினூடாக பலன்களை அனுபவிக்கக்கூடிய வகையில், இலங்கையின் டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் திரட்டல்கள் பிரிவில் mCash இன் சிறந்த பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது அமைந்திருந்தது.




படம் – ஜோசப் ஜோஷி (இந்தியாவின் சர்வதேச நிதிச் சேவைகள் நிலைய அதிகார சபை (IFSCA) பிரதம தகவல் அதிகாரி), ராஜ்குமார் கனகசிங்கம் – FASL தலைவர், யதுஷன் செல்வராஜா – உதவி முகாமையாளர் (SLT-Mobitel), ஆனந்த ஜயலத் – இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர், கலாநிதி. திஸ்ஸ ஜயவீர – இலங்கை Fintech சம்மேளனத்தின் சிரேஷ்ட ஆலோசகர், கலாநிதி. டி. குமாரதுங்க – இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர்.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ஆனந்த ஜயலத், மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் கலாநிதி. டி. குமாரதுங்க PhD, இலங்கை Fintech சம்மேளனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி திஸ்ஸ ஜயவீர, PhD, FASL தலைவர் ராஜ்குமார் கனகசிங்கம் மற்றும் ஜோசப் ஜோஷி (இந்தியாவின் சர்வதேச நிதிச் சேவைகள் நிலைய அதிகார சபை (IFSCA) பிரதம தகவல் அதிகாரி) ஆகியோருடன், இலங்கையின் முன்னணி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள், தொலைத்தொடர்பாடல் நிறுவனங்கள் மற்றும் fintech நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் முன்னணி மொபைல் நிதிச் சேவைகளை வழங்குநர் எனும் வகையில் mCash தொடர்ந்தும் திரட்டல் முகாமைத்துவ பிரிவில் குறிப்பிடத்தக்களவு வெற்றியைப் பதிவுசெய்த வண்ணமுள்ளது. வருமானத்தைப் பொறுத்தமட்டில் வளர்ந்து வரும் வாடிக்கையாளர் இருப்பு மற்றும் mCash செயற்படுத்தப்பட்ட வலையமைப்பு போன்றவற்றுடன் வியாபாரங்கள் ஒப்பற்ற வளர்ச்சியைப் பதிவுசெய்த வண்ணமுள்ளன. வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபார பங்காளர்களுக்கு தொழிற்றுறையில் முன்னணி சேவைகளை வழங்குவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை உறுதிசெய்வதில் உறுதியான வெற்றியைப் பதிவுசெய்துள்ளதுடன், டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் திரட்டல்களை நாடு முழுவதிலும் மேற்கொள்வதில் mCash இன் முயற்சிகளினூடாக ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றமை இந்தக் கௌரவிப்பினூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆசிய டிஜிட்டல் நிதியியல் விருதுகளை, சில நிதியியல், FinTech மற்றும் blockchain நிறுவனங்களுடன் இணைந்து ஆசிய FinTech கல்வியகம் வழங்குகின்றது. அமெரிக்காவின் கொலராடோவைச் சேர்ந்த சர்வதேச நியமச் சபையின் (IBS) அங்கம் பெறும் அமைப்பாக AFTA திகழ்கின்றது. உலகளாவிய ரீதியில் 40 க்கும் அதிகமான நிறுவனங்களில் இயங்கும் சான்றளிக்கும் அமைப்பாக திகழ்கின்றது. Global Academy of Finance and Management (GAFM)இனால் வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் வர்த்தகச்சின்னங்களின் உரிமையாண்மையை IBS கொண்டுள்ளது.

mCash இலங்கையில் தனது புத்தாக்கமான உள்ளம்சங்கள் மற்றும் உள்ளடக்கத்துக்கான தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வாழ்க்கைமுறையுடன் ஒன்றித்துள்ளமை போன்ற அறிமுகங்களினூடாக மொபைல் நிதிச் சேவைகள் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பணப்பரிமாற்றங்கள், மொபைல் ரீலோட்கள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் போன்ற பாரம்பரிய சேவைகளுடன் mCash இனால் கட்டணப்பட்டியல், காப்புறுதி, நிதி மற்றும் லீசிங் கொடுப்பனவுகள் போன்ற வசதிகளும் சௌகரியமாக வழங்கப்படுகின்றன. நபர்கள் தமது மொபைல் தொலைபேசிகளினூடாக நிதிக் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்கும் முறை மற்றும் நிதி உள்ளடக்கத்தை விரிவாக்கம் செய்வது போன்றவற்றில் mCash இனால் பெருமளவு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

மேலும், mCash இனால் செயற்படுத்தப்பட்ட விநியோக வலையமைப்பு அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைக்கின்றது. குறிப்பிடத்தக்களவு மற்றும் அதிகரித்துச் செல்லும் வாடிக்கையாளர் இருப்பு மற்றும் விற்பனையாளர் வலையமைப்பு போன்றவற்றுடன் கடந்த சில வருடங்களில் mCash பெருமளவான வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது.

மேலும், mCash இனால், QR குறியீட்டைப் பயன்படுத்தி ஒன்லைன் மற்றும் ஓவ்லைன் சொப்பிங் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதில், புகையிரத ஆசன முற்பதிவு, வைத்திய ஆலோசனை முற்பதிவு மற்றும் நெடுஞ்சாலைக் கொடுப்பனவுகள், வங்கி வைப்புகள் மற்றும் வாடிக்கையாளர்கள் விண்ணப்பித்து தமது மொபைலில் mCash ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய டிஜிட்டல் கடன்கள் போன்றன அடங்கியுள்ளன. இந்தச் சலுகைகள் மற்றும் நவீன தீர்வுகளுடன், mCash இனால் இலங்கையில் பணப்புழக்கமில்லாத எதிர்காலத்தை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# My Dentist சிகிச்சை நிலையம் கல்கிசை Medihelp வைத்தியசாலையில் நிறுவப்பட்டது




( படம் - கல்கிசை My Dentist சிகிச்சை நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில், My Dentist இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹசிக ஜயசூரிய (இடமிருந்து 3ஆம் நபர்) மற்றும் அதன் ஊழியர்கள் காணப்படுகின்றனர். )

இலங்கையின் முன்னணி பற்சிகிச்சை தொடர் நிலையங்களில் ஒன்றான My Dentist, தனது 15 ஆவது சிகிச்சை நிலையத்தை கல்கிசை Medihelp வைத்தியசாலையில் அண்மையில் நிறுவியுள்ளதாக அறிவித்துள்ளது.

அடிப்படைப் பற் சேவைகளுக்கு மேலதிமாக அழகுசாதன பற் சேவைகளை வழங்குவதில் புகழ்பெற்றுள்ள இந்த சிகிச்சை நிலையத்தின் விரிவாக்கத்தினூடாக பரந்தளவு பாவனையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த பற்சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும். My Dentist தொடரின் தாய் நிறுவனமாக Ataraxia Capital Partners திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

My Dentist சிகிச்சை அணியினரால் நவீன தொழில்நுட்ப மற்றும் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, வாடிக்கையாளர்கள் சிறந்த பெறுபேறுகளை எய்துவது உறுதி செய்யப்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு veneers, lumineers, dental implants, bonding, inlays and onlays மற்றும் teeth whitening அடங்கலாக பரந்தளவு அழகுசாதன பற்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இயற்கையான தோற்றமுடைய, அழகிய புன்னகைகளை ஏற்படுத்தி அதனூடாக நோயாளரின் முகப் பாவனை அம்சங்களை மெருகேற்றி அவர்களின் தன்னம்பிக்கைக்கு வலிமை சேர்ப்பதில் சிகிச்சை நிலையம் கவனம் செலுத்துகின்றது. ஒவ்வொரு சிகிச்சையும் அனுபவம் வாய்ந்த நிபுணரினால் முன்னெடுக்கப்படுவதுடன், வாடிக்கையாளர்கள் பாதுகாப்பு, சௌகரியம் மற்றும் தன்னிறைவில் கவனம் செலுத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

My Dentist பணிப்பாளர் சரத் ஸ்ரீதரன் கருத்துத் தெரிவிக்கையில், "ஒரே விதமான சிந்தனைகளைக் கொண்டவர்களுடன் பங்காண்மைகளை ஏற்படுத்தி எமது நிபுணத்துவம் வாய்ந்த அணியின் ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவை மற்றும் பராமரிப்பைப் பெற்றுக்கொடுத்து இலங்கையர்களின் புன்னகையை மேம்படுத்த உதவுவதில் நாம் எப்போதும் கவனம் செலுத்துகின்றோம். அண்மைய ஆண்டுகளாக நாம் முன்னெடுத்து வரும் விரிவாக்க நடவடிக்கைகளின்போது, எமது சிகிச்சை அணியினரும் எம்முடன் இணைந்து எமது சேவைகளை விரிவாக்கம் செய்வதில் பங்காற்றுகின்றனர். ஒன்றிணைந்து செயலாற்ற நாம் எதிர்பார்ப்பதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் தொடர்ச்சியாக வளர்ச்சியடையவும் எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

My Dentist பணிப்பாளர் அசந்த் செபஸ்டியன் கருத்துத் தெரிவிக்கையில், "My Dentist சிகிச்சை நிலையத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் என்பது எம் நிலையத்துக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பெரிதும் பயனளிப்பதாக அமைந்திருக்கும். விரிவாக்கத்தினூடாக நோயாளர்களின் தன்னிறைவு மற்றும் உயர் நியம பராமரிப்பு போன்றவற்றை வழங்கி பரந்தளவு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு வாடிக்கையாளரும் பிரத்தியேகமான பராமரிப்பைப் பெற்று எதிர்பார்க்கும் பெறுபேறுகளை எய்துவதை உறுதி செய்வதாக எமது சிகிச்சை நிலையங்கள் அமைந்துள்ளன." – என்றார். My Dentist சிகிச்சை நிலையங்கள் அத்துருகிரிய, பண்டாரகம, பொரலஸ்கமுவ, கொழும்பு - 7, கம்பஹா, ஹோமாகம, ஜா-எல, கடவத்தை, களனி, கொட்டாவ, மொரட்டுவ, கல்கிசை, பிலியந்தலை, ராகம மற்றும் தலவத்துகொட ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன.

# நிதியியல் ஆலோசனை நிகழ்ச்சியினூடாக மகளிர் வலுவூட்டலுக்கு உதவும் NDB வங்கி






NDB வங்கியினால் ஏற்பாடு செய்யப்படும் GCR (Greater Colombo Region) பிராந்திய நிதியியல் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் தலவத்துகொடை சனோரா வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. 'மகளிர் தொடர்பான வங்கியியல்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம், நிதிசார் உள்ளடங்கல், பாலின சமத்துவம் மற்றும் மகளிர் தலைமையிலான நிறுவனங்களுக்கு உதவுவதன் மூலமாக மகளிர் வலுவூட்டல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட NDB நிறுவனத்தின் நிலைபேறான தன்மை முன்னெடுப்பின் ஓர் அம்சமாகும்.

இவ் ஆண்டின் முதலாவது செயலமர்வான இந்நிகழ்வுக்கு இலங்கையிலுள்ள சுமார் 50 பெண் தொழில் முனைவோர் வருகை தந்திருந்தனர். இவ் ஆலோசனை நிகழ்ச்சியானது NDB வங்கியின் பாரிய கொழும்பு பிராந்தியத்தின் பிராந்திய முகாமையாளர் திரு.சந்திம அல்விஸ் அவர்களால் நடத்தப்பட்ட கடன் விழிப்புணர்வு அமர்வையும் வங்கியின் மீள்நிதியளிப்புத் துறையின் தலைவர் திரு. கபில தேசப்பிரிய அவர்களால் நடத்தப்பட்ட பெண் தொழில் முனைவோருக்கான மீள்நிதியளிப்பு வசதி தொடர்பான அமர்வையும் உள்ளடக்கியிருந்தது.

அரலிய வணிகக் குறியீட்டின் கீழ் இயங்கும் மகளிர் தொடர்பான வங்கியியல் என்பது வங்கியின் முக்கியமான மூலோபாயக் குவியம் ஆகும். இது நாட்டிலுள்ள மகளிர் தொழில்முனைவோரை இலக்காகக் கொண்டு அர்ப்பணிப்புடன் கூடிய முழுமையான வங்கியியல் முன்மொழிவை வழங்குவதன் மூலம் மகளிரை வலுவூட்டுவதற்கு விரும்புகிறது. NDB அரலிய திட்டமானது கடனளித்தல் மற்றும் கடனட்டைகள், கணக்குதாரர்கள் மற்றும் அவர்தம் உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டங்கள் முதலான மேலதிக நன்மையுடன் கூடிய சேமிப்புத் தெரிவுகளோடு பலவிதமான ஆலோசனை மற்றும் துணைச்சேவைகளை உள்ளடக்கிய நிதிசார் உதவிகளை வழங்குகிறது. அத்துடன், பாரம்பரிய மற்றும் கலாசார பாரபட்சங்களைத் தகர்த்தெறியும் வகையில் அறிவுப் பகிர்வு அமர்வுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வசதி கோரல் கலந்துரையாடல்கள் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டு செயற்பாடுகள் போன்ற பல முன்னெடுப்புகளிலும் வங்கி வசதிவழங்குநராகத் தொழிற்படுகிறது.

GCR பிராந்திய நிதி ஆலோசனை நிகழ்ச்சியை வெற்றிகரமாக நிறைவு செய்ய முடிந்தமை மகளிர் வலுவூட்டலுக்கான NDB நிறுவனத்தின் தொடர் முன்னெடுப்புகளுக்கான ஒரு சான்றாகும்.

NDB வங்கி இலங்கையின் பட்டியலிடப்பட்ட பெரும் வணிக வங்கிகளில் நான்காவது இடத்தில் உள்ளது. 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் LMD வெளியீட்டின் வருடாந்த தரவரிசையின்படி NDB வங்கியானது தொடர்ந்து இரண்டாண்டுகளாக இலங்கையில் அதிக விருதுகளைப் பெற்ற நிறுவனமாகத் திகழ்கிறது. Global Finance USA மற்றும் Euro money ஆகியவற்றின் சிறந்த வங்கிகளுக்கு விருது வழங்கும் வருடாந்த நிகழ்ச்சிகளில் 2022 இல் இலங்கையின் சிறந்த வங்கியாக NDB வங்கி தெரிவுசெய்யப்பட்டது. அத்துடன், Great Place To Work, USA '2022 இல் இலங்கையின் சிறந்த 50 பணியிடங்களில்' ஒன்றாக NDB வங்கி பட்டியல்படுத்தப்பட்டது. NDB என்பது இது NDB மூலதன சந்தைகளின் துணை நிறுவனங்களை உள்ளடக்கிய NDB குழுமத்தின் தாய் நிறுவனமாகும்.

இது ஒரு தனித்துவமான வங்கி மற்றும் மூலதன சந்தை சேவைகள் குழுவை உருவாக்குகிறது. டிஜிட்டல் வங்கியியல் தீர்வுகளினால் வலுவூட்டப்பெற்று இயங்கும் அர்த்தமுள்ள நிதியியல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மூலமாக தேசத்தையும் அதன் மக்களையும் மேம்படுத்துவதற்கு NDB வங்கி திடசங்கற்பம் பூண்டுள்ளது.

# லீசிங் வசதிகள் மூலம் சுயதொழில் வாய்ப்புகளை வழங்க Lanka Ashok Leyland உடன் கைகோர்க்கும் HNB




லங்கா அஷோக் லேலண்ட் வர்த்தக வாகனங்களைக் கொள்வனவு செய்யவுள்ள வாடிக்கையாளர்களுக்கு இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB நாட்டின் முன்னணி கனரக வர்த்தக வாகன விநியோகஸ்தரான Lanka Ashok Leyland (LAL) உடன் மீண்டும் கைகோர்த்து வாடிக்கையாளர்களுக்கு பல தனித்துவமான நன்மைகள் மற்றும் விதிவிலக்கான வட்டி விகிதங்களை வழங்கியுள்ளது.

DOST டிரக்குகளை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இந்தக் கூட்டாண்மை மூலம் சிறப்பு லீசிங் தொகுப்புகள் மற்றும் பல மேலதிக நன்மைகளும் வழங்கப்படும்.இந்தக் கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த HNB உதவிப் பொது முகாமையாளர் - தனிப்பட்ட நிதிச் சேவைகள், காஞ்சன கருணாகம, "லங்கா அஷோக் லேலண்ட் உடனான நீண்டகால உறவைப் புதுப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த இரண்டு வருடங்கள் சவாலானதாக இருந்தாலும், நாடு முழுவதிலும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் சிறு வணிகங்களை மீளக் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதாகும். அந்தவகையில், இலங்கையில் உள்ள முன்னணி வர்த்தக வாகன விநியோகஸ்த நிறுவனத்துடன் நாங்கள் எங்கள் கூட்டாண்மையைப் புதுப்பித்துள்ளோம். எங்கள் வாடிக்கையாளர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் வணிகத்தை மேம்படுத்த உதவுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்." எனத் தெரிவித்தார்.

வங்கி வாடிக்கையாளர்களுக்கு மூன்று, நான்கு மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு விஷேட வட்டி விகிதங்களுடன் விதிவிலக்கான வட்டி விகிதங்களையும் ஐந்து ஆண்டுகள் வரை 25% எஞ்சிய வீதத்தையும் வழங்குகிறது. HNB General Insurance வாடிக்கையாளர்களுக்கு கார் இன்சூரன்ஸ் பிரீமியங்களில் கவர்ச்சிகரமான கழிவுகள், விபத்து மரணம் ஏற்பட்டால் ரூ. 4.5 மில்லியன் இலவச ஆயுள் காப்புறுதி மற்றும் ரூ.6,00,000 இயற்கை மரண காப்புறுதி ஆகியவற்றை வழங்குகிறது.

மேலும், லங்கா அஷோக் லேலண்ட் வாகனங்களை வாங்கும் வாடிக்கையாளர்கள் HNB Prestige Prime கிரெடிட் கார்டைப் பெறலாம், அங்கு அவர்கள் பல்வேறு கார் தயாரிப்புகள், வாகன உதிரிப்பாகங்களை சரிபார்த்தல் சேவைகள், உதிரிப்பாகங்கள், டயர்கள் மற்றும் பேட்டரிகள் ஆகியவற்றை நாடு முழுவதும் உள்ள HNBயின் விரிவான விநியோக வலைப்பின்னல் மூலம் சிறப்பு தள்ளுபடியைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த கிரெடிட் கார்டின் முதல் வருடத்திற்கான வருடாந்த கட்டணம் செலுத்தவேண்டியதில்லை.

லங்கா அஷோக் லேலண்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி உமேஷ் கௌதம், "கொவிட்-19 இன் தாக்கம் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஆகியவை போக்குவரத்துத் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலர் பொருளாதார பின்னடைவுகளைச் சந்தித்தனர். இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் எங்களது வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒத்துழைப்பாக நின்று அவர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதன் மூலம் பெருநிறுவனத் துறைக்கு முன்மாதிரியாக இருப்போம் என்று நம்புகிறோம். எனவே, இலங்கையின் மிகவும் மரியாதைக்குரிய வங்கிகளில் ஒன்றான எங்களுடைய கூட்டாண்மையைப் புதுப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், எங்கள் நம்பிக்கையான வாடிக்கையாளர் தளத்திற்கான எங்கள் உறுதியான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்." எனத் தெரிவித்தார்.



*இவ்வாண்டில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திரைப்படங்களில் ஒன்றான பொன்னியின் செல்வன் 2, யாழ்ப்பாணம் REGAL SILVER திரையரங்கில் Dialog Club Vision அங்கத்தவர்களுக்கென பிரத்தியேகமாக திரையிடப்பட்டது. தமிழ் சினிமாவின் பல ஆண்டுகள் கனவான இத்திரைப்படம் Dialog Club Vision அங்கத்தவர்களுக்கென பிரத்தியேகமாக திரையிடப்பட்டவேளையில் அவர்கள் தமது உறவுகளுடன் கண்டுகளித்தனர். அங்கத்தவர்கள் திரைப்படத்தின் பிரமிக்கவைக்கும் காட்சிகளையும், நடிகர்களின் நடிப்பையும் பல்லாண்டு பழைமை வாய்ந்த நாவல் திரைக்கதையாக வடிவமைக்கப்பட்ட விதத்தையும் புகழ்ந்தனர். Dialog Club Vision அங்கத்தவர்களுக்கு கிடைக்கப்பெறும் ஏராளமான அனுகூலங்களில் இதுவும் ஒன்று. தனது அங்கத்தவர்களுக்கு பிரத்தியேகமான சேவை தனித்துவமான அனுபவங்களையும் வழங்கும் அர்ப்பணிப்புக்கு இதுவும் ஒரு சான்று.*

த
கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



# வெளிநாட்டில் கஷ்டப்படும் இலங்கையர்களை தாயகத்துக்கு அழைத்துவரக் கோரி ஆர்ப்பாட்டம்



(மூதூர் செய்தியாளர்)

போலி முகவர்களால் ஏமாற்றப்பட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக அனுப்பப்பட்டு வெளிநாடுகளில் கஷ்டப்படும் இலங்கையர்களை உடனடியாக தாயகத்துக்கு அழைத்துவர அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்து திருகோணமலையில் அமைந்துள்ள வெளிநாட்டு அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்துக்கு முன்னால் வியாழக்கிழமை(01) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதில் 50க்கும் மேற்பட்ட பெண்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது, ''அரசாங்கமே போலி வெளி நாட்டு முகவர்களை தடை செய், பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய், நாட்டுக்கு வர தவிக்கும் பெண்களை வீட்டுக்கு அனுப்பு'' உள்ளிட்ட பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நிறைவடைந்த பின்னர் வெளிநாட்டு அமைச்சின் திருகோணமலை பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்துக்கு சென்ற பெண்கள் சிலர் அலுவலக கிளைத் தலைவர் கே.விக்னேஸ்வரானந்தனிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரினையும் கையளித்திருந்தனர்.

# யானை தாக்கி ஒருவர் பலி

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாகாமம் பிரதேசத்தில் யானைத் தாக்குதலுக்குள்ளான ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் வியாழக்கிழமை(01) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தம்பிலுவில் 02 பிரதான வீதியை சேர்ந்த 67வயது மதிக்கத்தக்க கனகரெட்ணம் கங்காதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் திருக்கோவில் சாகாமம் பகுதியில் உள்ள வயல் காணியில் காவலில் ஈடுபட்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



**இனமதவாத பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கோணுமாம் எண்டு ஞானசார தேரர் சொல்லியிருக்காரு எலுவா? உங்கட பௌத்த சமயத்தில உள்ள புத்தபிக்குமாரும், உங்கட நாட்டு மந்திரிகளும்தான் மதவாதத்த தூண்டி வடக்கு கிழக்கில பௌத்த மதம் இல்லாத இடமெல்லாம் பன்சாலைகளையும், புத்தர் சிலைகளையும் கண்டபடி அமைக்கிறாங்க எலுவா..? முதலில் உங்கட ஆக்கள புத்தரின் போதனைகள நன்றாக படிக்க சொல்லுங்க தேரர் அவங்களாலதான் இன மத பிரச்சன எல்லாக்கோதாரிகளும்! உன்னத்திருத்து ஒலகம் திருந்தும் சாது!**



**எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் மீண்டும் நீண்ட வரிசையில் காத்துநிற்கும் செயற்பாடுகள் ஏற்பட்டுள்ளன. திருகோணமலையில் கந்தளாய், திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளில் வியாழக்கிழமை (01) காலை எரிபொருளை பெறுவதற்கு மக்கள் வரிசையில் நிற்பதை காணக்கூடியதாகவிருந்தது. கடந்த காலங்களில் QR முறைமை பின்பற்றப்பட்டு வந்த நிலையில் மீண்டும் வரிசை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கந்தளாய் செய்தியாளர்)**

# உள்ளூராட்சி மன்றங்களில் நீண்டகாலமாக பணியாற்றுவோரை நிரந்தரமாக்க நடவடிக்கை

## ஆளுநருடனான சந்திப்பில் இணக்கமென முஷாரப் எம்.பி. தெரிவிப்பு

(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுற்றுலாத்துறை, சுகாதாரம், காணி அபிவிருத்தி போன்ற விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக்குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு ஆளுநருக்கும் முஷாரப் எம்.பிக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை(31) இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



எமது நாடு மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் இருந்தபோது ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, பல சவால்களை எதிர்கொண்டு நாட்டை மீட்டுவரும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாகவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

மேலும், சிறுபான்மையினக் கட்சி ஒன்றின் தலைவரான தாங்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் கிழக்கு மக்களும் இதனை பெரிதும் ஆதரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நீண்டகாலமாக தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார். இக்கோரிக்கையை நானும் விரும்புகின்றேன். அதற்கான அனுமதி மத்திய அரசாங்கத்தினால் கிடைக்கும்போது அதனை விரைவாகச் செய்வேன். இதற்கான அனுமதி கிடைப்பதற்கு நீங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு திருப்திகரமாக அமைந்ததாகவும் மக்களுக்கான பணியில் மிக வேகமாக செயல்படுவார் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் முஷாரப் எம்.பி. இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எஸ்.முபாரக், அன்வர் சதாத், பாராளுமன்ற உறுப்பினரின் ஊடக இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வங்கியை உடைத்து கொள்ளையிட முயற்சி: சந்தேக நபர் தப்பியோட்டம்

## ஆரையம்பதியில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தில் பூட்டப்பட்டிருந்த இலங்கை வங்கி கதவை உடைத்து உட்புகுந்து கொள்ளையிட முயற்சித்தபோது வங்கியின் அவசர ஒலியையடுத்து, பொதுமக்கள் அந்த நபரை பிடிக்க முற்பட்டபோது தப்பியோடிய சம்பவம் ஒன்று வியாழக்கிழமை (01) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

வழமைப்போன்று மாலை வேளையில் வங்கியை முகாமையாளர் பூட்டிவிட்டு சென்ற நிலையில் சம்பவதினமான அதிகாலை 3.00 மணியளவில் சந்தேக நபர் ஒருவர் வங்கியின் பிரதான கதவை அலவாங்கினால் உடைத்து அதன் பின்னர் கண்ணாடி கதவை உடைத்து உள் நுழைந்துள்ளார்.

இதன்போது அங்கு பொருத்தப்பட்டிருந்த அவசர ஒலி எழுப்பியதையடுத்து வங்கிக்கு அருகிலுள்ளவர்கள் வெளியே வந்தபோது, கொள்ளையடிக்க முயற்சித்திருப்பது தெரியவந்ததையடுத்து, குறித்த நபரை பிடிக்க முற்பட்டபோது அவர்கள் மீது கல்லால் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அவ்விடத்திலிருந்து அலவாங்கு, தோல் பை, செருப்பு என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளதுடன் பொலிஸ் தடயவியல்பிரிவு அழைக்கப்பட்டு மோப்பநாய்களுடன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**அம்பாறை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் ஐந்தாம் கட்டை ஆலிம் நகர் பிரதேசத்தில் கொழும்பிலிருந்து பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்று வியாழக்கிழமை(01) காலை வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதைக் காணலாம். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)**

# விலைக் குறைப்பு அறிவிக்கப்பட்டபோதிலும் அம்பாறையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு

(பாறுக் ஷிஹான்)

எரிபொருள் விலை புதன்கிழமை(31) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டு புதிய விலைகள் அறிவிக்கப்பட்டபோதிலும், அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளில் பெற்றோல் தட்டுப்பாடு நிலவுவதுடன் மக்கள் மீண்டும் வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.



மேலும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு என்ற தகவல் பரவ ஆரம்பித்துள்ள நிலையில், எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, ஒலுவில் உள்ளிட்ட பகுதிகளில் அன்றையதினம் இரவுமுதல் மறுநாள் காலைவரை எரிபொருளை பெறுவதற்கு எரிபொருள் நிலையங்களுக்கு வருகை தந்ததை காண முடிந்தது.

கடந்த காலங்களில் QR முறைமையினால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம், திடீரென இவ்வாறு நெருக்கடிக்குள்ளானமை மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் விலைகுறைப்பும் ஏமாற்றத்தை தந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், விலைக்குறைப்பு எரிபொருட்களுக்கு ஏற்பட்டபோதிலும் நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தவண்ணம் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

தற்போது எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், பெற்றோல் 92 ஒக்டெய்ன் லீற்றருக்கு ரூ.15வால் குறைத்து ரூ.318 ஆகவும் பெற்றோல் 95 ஒக்டெய்ன் 20 ரூபாவால் அதிகரித்து ரூ.385 ஆகவும் சுப்பர் டீசல் 10 ரூபாவால் அதிகரித்து ரூ.340 ஆகவும் மண்ணெண்ணெய் 50 ரூபாவால் குறைத்து ரூ.245 ஆகவும் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் கையளிப்பு



(கல்லடி செய்தியாளர்)

அமரர் ஐயாத்துரை நடேசனின் நினைவு தினமான 31ஆம் திகதி கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் உத்தியோகபூர்வமாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு ஊடக அமையத்திடம் கையளிக்கப்பட்டது.

இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன்போது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் இரா.துரைரத்தினம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விசேட தேவையுடையவர்களுக்கான தொழிற்சந்தை

(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள விசேட தேவையுடையவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை வழங்கும் நிகழ்வானது மாவட்ட செயலகத்தின் மனிதவலு வேலைவாய்ப்புப் பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் (30) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.



இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட திருகோணமலை மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தெரிவிக்கையில், மனிதர்களாகிய எம் அனைவரிடத்திலும் கண்ணுக்குப் புலப்படக்கூடிய, புலப்படக்கூடாத பலவீனங்கள் காணப்படலாம். அவற்றை ஒரு குறையாக கருதாமல் நல்லதொரு சந்தர்ப்பமாக நினைத்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு திறமைகள் காணப்படுகின்றன. தங்களுடைய அந்த திறமைகளை சரியான முறையில் பயன்படுத்தி வாழ்வை பலப்படுத்திக் கொள்ள இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

விசேட தேவையுடையவர்களுடைய திறன்களை இனங்கண்டு அவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கி சமூகத்தில் நல்லதொரு நிலைக்கு அவர்களை கொண்டு வருவதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. இதில் திருகோணமலை மாவட்ட 11 பிரதேச செயலகத்தைச் சேர்ந்த விசேட தேவையுடையவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அதன் அடிப்படையில், நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று அவர்களை தெரிவு செய்கின்ற செயற்பாடும் நடைபெற்றது. இந்நிகழ்வில் மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் ஜெசினா பஹ்மி, சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன், மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்கள பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விசேட தேவையுடையவர்கள் மற்றும் அவர்களின் பாதுகாவலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புகைத்தல் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக மட்டு. மாவட்ட செயலக வளாகம் பிரகடனம்

(மட்டக்களப்பு)

சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகம் புகைத்தல் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக புதன்கிழமை (31) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

"எமக்கு உணவு தேவை புகையிலை தேவையில்லை" என்ற தொனிப்பொருளின்கீழ் சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் இம்முறை அனுஷ்டிக்கப்படுகின்றது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின்கீழ் செயற்பட்டுவரும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற புகைத்தல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வின்போது பதாதைகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், விமானப்படை, பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மண்முனை வடக்கு, ஏறாவூர் நகர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



இவ்விழிப்புணர்வு வேலைத்திட்டமாக மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகளில் ஸ்டிக்கர் ஒட்டுதல், துண்டுப்பிரசுரம் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் அதிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்லடி வாவியிலிருந்து மாணவி சடலமாக மீட்பு

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அண்மையில் உள்ள வாவியில் உயிரிழந்த நிலையில் உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவியொருவர் புதன்கிழமை (31) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வண்டிங்ஸ் வீதியைச் சேர்ந்த திருச்சந்திரன் ஸஹரா (வயது22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். குறித்த மாணவி பிற்பகல் 2.00 மணியளவில் கல்லடி பாலத்தில் குதித்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனையின் பொருட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் சடலத்தை எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உலக செய்திகள்

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## கீவில் 2 குழந்தைகள் உட்பட 3 பேர் உயிரிழப்பு



உக்ரைன் தலைநகர் கீவில் ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

கீவின் கிழக்கிலுள்ள டெஸ்னியான்ஸ்கி மற்றும் டினிப்ரோவ்ஸ்கியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் 14 பேர் காயமடைந்திருப்பதாக கீவ் நகர அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதலில் வைத்தியசாலை மற்றும் அதற்கு அருகிலுள்ள அடுக்குமாடிக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. கீவில் கடந்த ஒரு மாதத்தில் 18 தடவையாக நடத்தப்படும் ரஷ்ய தாக்குதல் இது என்று உக்ரைன் கூறியுள்ளது.

இதேவேளை, கீவில் ரஷ்ய ஏவுகணையிலிருந்து உடைந்த சிறு பகுதியொன்று வீதியில் சென்றுகொண்டிருந்த காருக்கருகே விழுந்ததால் மக்கள் அச்சமடைந்தனர்.

ரஷ்ய ஏவுகணை, இலக்கை நெருங்குவதற்கு முன்னதாகவே இடைமறித்து அழித்துவிட்டதாகவும் அதன் மிச்சங்களே வீதியில் வீழ்ந்ததாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

# புகைப்பிடிப்பவர்களற்ற முதல் ஐரோப்பிய நாடாகும் சுவீடன்




உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இந்தியாவின் பூரி கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த மணற்சிற்பம்

தினசரி புகைபிடித்தல் சதவீதம் குறைந்து வருவதால் புகைப்பிடிக்காதவர்கள் வசிக்கும் முதல் ஐரோப்பிய நாடாக சுவீடன் மாறுகின்றது.

புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகளை வலியுறுத்துவதுடன் அது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்த ஆண்டுதோறும் மே 31ஆம் திகதி 'உலக புகையிலை இல்லா தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் ''உணவை அதிகரியுங்கள்; புகையிலையை அல்ல!'' என்ற தொனிப்பொருளில் மேற்படி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், சுவீடனில் தினசரி புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், புகைபிடிக்காதவர்கள் வசிக்கும் முதல் ஐரோப்பிய நாடாக அது விரைவில் மாறவுள்ளது.

புகைபிடிப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஐந்து சதவீதம் பேர் மட்டுமே புகைபிடிக்கின்றனர்.

இது கடந்த ஆண்டு 5.6 சதவீதமாக இருந்த நிலையில், இந்த ஆண்டு மேலும் குறைந்துள்ளது.

20 ஆண்டுகளுக்கு முன்னர் மொத்த மக்கள் தொகையில் புகைபிடிப்பவர்களின் சதவீதம் 20ஆக இருந்த நிலையில், தற்போது வெகுவாக அது குறைந்துள்ளது.

புகைபிடிப்பதால் ஏற்படும் தீமை குறித்த விழிப்புணர்வு இளைஞர்கள் மத்தியில் அதிகளவு இருப்பதே இதற்குக் காரணம் என சுவீடன் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு புகைபிடிப்பதைக் கட்டுப்படுத்த அதிகளவு விழிப்புணர்வு ஏற்படுத்திய சுவீடன் புற்றுநோய் மையத்தைச் சேர்ந்த உல்ரிகா தெரிவிக்கையில்,

முதலில் பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை ஏற்படுத்தப்பட்டது. படிப்படியாக பாடசாலை, விளையாட்டரங்குகள், உணவகங்கள், பஸ்- ரயில் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. புகையிலைப் பொருட்கள் மீதான வரிகள் உயர்த்தப்பட்டமையே அது பயன்பாட்டில் இல்லாததற்கு முக்கிய காரணமாகும் - என்றார்.

# பஞ்சத்தின் பிடிக்குள் பாகிஸ்தான்



பாகிஸ்தானில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா, ரஷ்யா - உக்ரைன் போர் போன்றவை உலகளவில் கடுமையான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

அந்நிய செலாவணி குறைந்ததையடுத்து இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் வரலாறு காணாத நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.

குறிப்பாக, பாகிஸ்தானில் உணவு, மின்சாரம், எரிபொருள் உள்ளிட்டவைக்கு ஏற்கனவே கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதோடு, அங்கு கடந்த ஆண்டு புயல், மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு விளைபொருட்களின் உற்பத்தி குறைந்துள்ளது. இதனாலும் நாட்டில் பொருளாதார நெருக்கடியும் உணவு பற்றாக்குறையும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், பாகிஸ்தானில் அடுத்து வரும் மாதங்களில் கடும் உணவுப்பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

# பலஸ்தீன் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

## ஐவர் உயிரிழப்பு; 10பேர் படுகாயம்

சிரிய எல்லையில் லெபனானின் குவசயா நகரில் பதுங்கியிருந்த பலஸ்தீனிய ஆயுதக் குழுவினர் மீது இஸ்ரேல் விமானப்படை நேற்று வான் தாக்குதலை நடத்தியுள்ளது.

இத்தாக்குதலில் பலஸ்தீனிய ஆயுதக் குழுவைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலையடுத்து பலஸ்தீனிய ஆயுதக்குழு இஸ்ரேல் மீது பதிலடித் தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இஸ்ரேல் - பலஸ்தீன எல்லையில் பதற்றம் நிலவுகிறது.

# ஜேர்மனிலுள்ள 4 ரஷ்ய தூதரகங்களுக்கு பூட்டு



தங்கள் நாட்டில் இயங்கி வரும் 4 ரஷ்ய துணைத் தூதரகங்களை மூட ஜேர்மனி உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக தங்கள் நாட்டில் செயற்பட்டுவரும் ஜேர்மன் தூதரகம் மற்றும் அது தொடர்புடைய அதிகாரிகள், பணியாளர்களின் எண்ணிக்கை நவம்பர் மாதத்துக்குப் பின்னர் 350இற்கு மேல் இருக்கக்கூடாது என்று ரஷ்யா அண்மையில் உத்தரவிட்டது.

அதையடுத்து தூதரகங்கள் மட்டுமன்றி, ஜேர்மன் கலாசார மையங்கள், ஜேர்மன் பாடசாலைகள் ஆகியவற்றில் பணி புரிபவர்களும் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், யேகடெரின்பர்க், நோவோசிபிர்ஸ், கலினின்கார்ட் ஆகிய ரஷ்ய நகரங்களிலுள்ள ஜேர்மன் தூதரகங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவின் இந்நட வடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் தங்கள் நாட்டில் இயங்கிவரும் 4 ரஷ்ய துணைத் தூதரகங்களை மூட ஜேர்மனி தற்போது உத்தரவிட்டுள்ளது.

ஜேர்மனியின் மியூனிக், பான், ஃபிராங்க்ஃபார்ட், ஹெம்பர்க், லைப்ஸிக் ஆகிய 5 நகரங்களில் ரஷ்யாவுக்கு துணைத் தூதரகங்கள் உள்ளன. ஜேர்மனியின் இந்த உத்தரவையடுத்து இவற்றில் எந்தத் துணைத் தூதரகங்களை மூடுவது, எதனைத் தொடர்வது என்ற முடிவு ரஷ்யாவின் கையிலேயே உள்ளது.

# உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் மீண்டும் முதலிடத்தில் எலான் மஸ்க்

உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் டெஸ்லா நிறுவன அதிபர் எலான் மஸ்க், மீண்டும் முதலிடத்தை பிடித்திருப்பதாக புளூம்பெர்க் நிறுவனம் அறிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு முதல் டெஸ்லா அதிபர் மஸ்க்கும், பிரான்ஸ் தொழிலதிபர் லூயிஸ் வுட்டன் பெர்னார்ட் அர்னார்ட்டும் மாறி மாறி, முதலிடத்தை வகித்து வருகின்றனர்.

தற்போது இந்திய ரூபாய் மதிப்பில் 15 இலட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாய் சொத்துகளுடன் மஸ்க் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளதாக புளூம்பெர்க் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இலங்கை – ஆப்கான் அணிகள் மோதும் ஒருநாள் தொடர் ஹம்பாந்தோட்டையில் இன்று ஆரம்பம்




சுற்றுலா ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி இன்று காலை 10.00 மணிக்கு அம்பாந்தோட்டையில் ஆரம்பமாகிறது.

இந்தாண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேரடியாக தகுதிபெறத் தவறிய இலங்கை அணி, சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள தகுதிச்சுற்றில் ஆடவுள்ளது. இதற்காக பயணிக்கவுள்ள இலங்கை அணி முன்னதாக ஆப்கானிஸ்தான் அணியுடன் சொந்த மண்ணில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகிறது.

அதன்படி முதல் ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆட்டங்கள் ஞாயிற்றுக்கிழமை, புதன்கிழமை முறையே நடைபெறவுள்ளன. அனைத்து போட்டிகளும் ஹம்பாந்தோட்டையிலேயே பகல் நேரப் போட்டியாக நடைபெறவுள்ளன. இலங்கை அணிக்கு தசுன் சானக்கவும் ஆப்கானிஸ்தான் அணிக்கு ஹஸ்மதுல்லாஹ் சஹீடியும் தலைமை தாங்கவுள்ளனர். இதேவேளை, இலங்கையுடனான தொடரில் பங்கேற்பதற்காக ஐ.பி.எல். தொடரை முடித்துக்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த ஆப்கான் அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் ரஷீட் கான் உபாதைக்குள்ளாகியுள்ளதால் முதல் இரு ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இளம் வயதில் ஐ.பி.எல். கிண்ணம் புதிய சாதனை படைத்த பத்திரன



2023 ஐ.பி.எல்லில் சென்னை அணி சம்பியனாகியதன் மூலம் இலங்கை வீரர் மதீஷ பத்திரன வித்தியாசமான சாதனையொன்றைப் படைத்துள்ளார்.

20 வயது 161 நாட்களில் ஐ.பி.எல். கிண்ணத்தை வென்ற மூன்றாவது இளைய வீரர் என்ற பெருமையையும் பத்திரன பெற்றுள்ளார். அவருக்கு முன் ரவீந்திர ஜடேஜா 2008 இல் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக 19 வயது 178 நாட்களிலும், ராகுல் சாஹர் 2009 இல் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக 19வயது 281 நாட்களிலும் ஐ.பி.எல். கிண்ணம் வென்ற அணியில் இடம்பெற்றிருந்த மிக இளம் வயது வீரர்களாக முதல் மற்றும் இரண்டாவது இடத்தில் உள்ளனர்.

மதீஷா பத்திரன இந்த சீசனில் இதுவரை 12 போட்டிகளில் விளையாடி 19 விக்கெட்டுகளுடன் சிறப்பாகப் பந்து வீசியிருந்தார். சென்னை அணிக்காக இந்த சீசனின் மூன்றாவது அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையையும் பத்திரன படைத்தமை சிறப்பம்சமாகும்.

# இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் உப தலைவராக அலியார் பைசர் தெரிவு



(மாளிகைக்காடு நிருபர்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையின் முன்னோடி ஆசிரியர் அலியார் பைசர் இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் உப தலைவராக நான்கு ஆண்டு காலப் பகுதிக்கு (2023 – 2027) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நிருவாக சபைத் தேர்தலும் விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தேர்தல் குழுவின் தலைமையில் இலங்கை பெட்மிண்டன் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

உப தலைவர் பதவிக்காக 16 பேர் கடந்த ஏப்ரல் மாதம் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் ஒருவரது வேட்புமனு நிராகரிக்கப் பட்டது. அத்துடன் மூவர் தமது வேட்புமனுவை வாபஸ் வாங்கிக் கொண்டனர். ஏழுபேர் உப தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதற்கிணங்க அலியார் பைசரும் அதில் ஒருவராக அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டார்.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஒரு சிறுபான்மை இனத்தவர் இலங்கையின் தேசிய விளையாட்டுச் சங்கமான இலங்கை பெட்மின்டன் சங்கத்துக்கு உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதற்றடவையும் வரலாற்று மைல்கல்லாகவும் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அலியார் பைசர் கிழக்கு மாகாண பெட்மின்டன் சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும் மற்றும் அம்பாறை மாவட்ட பெட்மின்டன் சங்கத்தின் ஸ்தாபகராகவும், பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் ஓட்டமாவடி தேசிய பாடசாலை முதலிடம்



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு கடந்த வாரம் ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.ஐ.அஹ்ஸாப், எம்.எல்.எம். முதர்ரிஸ் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் எம்.ஏ.சீ.எம்.நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், ஓட்டமாவடி தேசிய பாடசாலை 151 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுக் கொண்டதுடன், ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயம் 147 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மற்றும் மீராவோடை அல் - ஹிதாயா வித்தியாலயம் ஆகியவை 103 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச சிலம்பம் போட்டியில் சாதித்த வீர- வீராங்கனைகளுக்கு கொட்டகலையில் பாராட்டு விழா



(எஸ்.கணேசன்)

இந்தியாவின் பெங்களூரில் கடந்த வாரம் நடைபெற்ற முதலாவது சர்வதேச சிலம்பம் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்து இலங்கைக்கு பெருமை சேர்த்த வீர- வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொட்டகலையில் நடைபெற்றது.

கொட்டகலை தனியார் விடுதியொன்றில் இலங்கை சிலம்பம் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.ஏ.கந்தசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது வீர- வீராங்கனைகளின் சிலம்பம் நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

இலங்கை, இந்தியா, சுவிட்ஸர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, சிங்கப்பூர், மலேஷியா, டுபாய், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்த முதலாவது சர்வதேச சிலம்பம் போட்டியில் இலங்கை வீர -வீராங்கனைகள் 9 தங்கம் உட்பட 69 பதக்கங்களை வெற்றிகொண்டுள்ள அதே நேரம், இந்தியா முதலாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை சுவிட்ஸர்லாந்தும் பெற்றுக் கொண்டன. இலங்கை சிலம்பம் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் இராமர் திவாகரன் இலங்கை அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராவார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7